Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-16 | 02-10-2004 | சனிக்கிழமை | ஓசை -227




## தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் நூல் சுவிசில் வெளியீடு



தமிழீழதேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் "பிரபாகரன் ஏ லீடர் போர் ஓல் சீசன்ஸ்" ("Prabhakaran" A leader for all seasons) எனும் நூல் வெளியீட்டு விழா இன்று மாலை சுவிற்சர்லாந்தில் நடைபெறவுள்ளது. இந்நூலில் தேசியத் தலைவர் அவர்களின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் பெருமளவான புகைப்படங்கள் அடங்கியுள்ளன.

இந்நிகழ்வில் சுவிற்சர்லாந்து சென்றுள்ள தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் அவர்கள், தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா அவர்கள், மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அவர்கள், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் அவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

### இடைக்காடு மற்றும் வளலாயில்

## உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்டிய பகுதியில் குடியேறிய மக்களை வெளியேற இராணுவம் பணிப்பு

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தினை அண்டிய இடைக்காடு மற்றும் வளலாய்ப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள இருபதிற்கும் அதிகமான குடும்பங்களை அங்கிருந்து மீண்டும் வெளியேறுமாறு படைத் தரப்பு வற்புறுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வியாழனன்று இப்பகுதிகளுக்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரனிடமே அப்பகுதி மக்கள் இப்புகாரினைத் தெரிவித்துள்ளனர். மீளக்குடியமர்ந்த குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு நாளாந்தம் வலியுறுத்தி வருகின்ற படைத் தரப்பு, ஏனைய குடும்பங்கள் தமது வீடுகளில் உள்ள மலசல கூடங்களைத் திருத்தவோ, வீடுகளில் திருத்த வேலைகளை மேற்கொள்ளவோ அனுமதி மறுத்து வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மீளக்குடியமர்ந்துள்ள மக்களிற்கான உலர்உணவு நிவாரணங்களை வழங்க ஏதுவாக அப்பகுதியில் பலநோக்குக் கூட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனீவாவில் புலிகளின் பிரதிநிதிகள் சட்ட நிபுணர்கள் கலந்துரையாடல் ஆரம்பம்!

### இ.நி.திட்டவரைவு, அடுத்த கட்ட நடவடிக்கை என்பன குறித்து விரிவாக ஆராய்வு

(ஜெனீவா)

**இடைக்கால நிர்வாக சபைக்கான வரைவு பற்றியும் அடுத்த கட்ட நடவழக்கைகள் பற்றியும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்களுடனான கலந்துரையாடலை நேற்று பிற்பகல் சுவிற்சர்லாந்தில் ஆரம்பித்துள்ளனர்.**

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள விடுதி மண்டபம் ஒன்றில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் படம் வைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் தலை மையில் கலந்துரையாடல் தாயக நேரப்படி நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமானது. முதலில் (12ஆம்பக்கம் பார்க்க)



## சுவிஸ்.வெளியுறவுத்துறை அதிகாரிகள்-புலிகள் சந்திப்பு!

(ஜெனீவா)

ஜெனீவா சென்றுள்ள விடுதலைப்புலிகளின் அரசியற்குழுவினரைச் சுவிற்சர்லாந்து வெளியுறவு அமைச்சின் உயரதிகாரிகளும், நிபுணர்களும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று மாலை இச்சந்திப்பு நடைபெற்றது. இதேவேளை இதற்கு முன்னதாக இச் சுவிற்சர்லாந்து அதிகாரிகளும் நிபுணர்களும் புலிகளின் அரசியல் யாப்புக்குழுவினரைச் சந்தித்தனர். இன்றும் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

## தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் வெகுவிமரிசையாக சிறுவர்தின நிகழ்வு

சர்வதேச சிறுவர்தினம்நேற்றுத் தமிழீழத்தில் அனைத்துப் பகுதிகளிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பொதுமைதானத்திற்கு அருகில் ஆரம்பமான பாண்ட்வாத்திய அணிவகுப்புடனான ஊர்வலத்தின் மூலம் சிறார்கள் பொது மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டு, அங்கு சிறுவர்கள் மற்றும் பெரியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் சிறப்பாக நடைபெற்றன. தொடர்ந்து 11.00 மணியளவில் கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் இருந்து ஆரம்பமான நாதஸ்வர இசையுடனான அணிவகுப்பு மூலம் சிறுவர்கள் அழைத்து வரப்பட்டு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் முன்பள்ளிக் கொடிகள் ஏற்றப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரை நீக்கமும்

வெவ்வேறு சம்பவங்களின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஆறு மாவீரர்களின் நடுகற்கள் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுத் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கடந்த 16.12.1997 அன்று வடமராட்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவடைந்த

* கடற்புலி லெப்.கேணல் அருச்சுனா (இரத்தினம் வசந்தகுமார், செல்வம், அரிசிஆலை வீதி, உடுப்பிட்டி) (12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் புலிகளின் அலுவலகம் மீது முஸ்லிம் தேசவிரோதக்குழு தாக்குதல்

மன்னாரில் நேற்று முன்தினம் நள்ளிரவு சிறிலங்காப் பொலிசாரின் துணையுடன் முஸ்லிம் தேச விரோதக் குழுவினர்40 பேர் பிரதான வீதியில் உள்ள விடுதலைப்புலிகளின் இரண்டு அலுவலகங்கள் மீதும், மூர் வீதியிலுள்ள இன்னுமொரு அலுவலகத்தின் மீதும், தாக்குதல் நடத்தினர். கற்கள், தடிகள் என்பவற்றின் மூலம் எறிந்து தாக்குதல் நடத்தியபின் மன்னார் அரசியல் துறைச் செயலகத்தின் பெயர்ப்பலகைகள், கதவுகள் யன்னல்களையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். இவற்றில் மூர் வீதியில் உள்ள விடுதலைப்புலிகளின் (12-ம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் புலிகளின் அலுவலகங்கள் தாக்கப்பட்டதற்குக் கண்டனம்

மன்னாரில் விடுதலைப்புலிகளின் அலு வலகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அங்குள்ள தமிழ் மக்கள் கண்டித்துள்ளனர். இத் தாக்குதல் சம்பவத்தில் தொடர் புடையோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

## மன்னார் கொலைச் சம்பவத்திற்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை

### -மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

மன்னாரில் நடைபெற்ற கொலைச் சம்பவத்துடன் எமக்கு எவ்வித தொடர்பும் இல்லையென மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாங்கள் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் எமது அரசியல் பணிகளைச் செய்யும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த மக்கள் பல்வேறு சமூகச் சீரழிவுகளில் இருந்து மீள வேண்டும் என் பதற்காக நாம் பல்வேறு சமுக பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். மன்னார் பிரதான வீதியில் எமது அலுவலகஙகள் இருக் கின்றன. இரவு 12.20 மணியளவில் எமது அலுவலகங்கள் மீது சரமாரியான கல் வீச் சுக்கள் நடாத்தப்பட்டதை எம்மால் அவ தானிக்க முடிந்தது. இதில் 40இற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

*தரம்–05 இற்கான புதிய வகுப்பு*

2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய வகுப்பு 01.10.2004. முதல் ஆரம்பமாகியுள்ளது. இடம்-கேம்பிறிஜ் கல்லூரி, கிளிநொச்சி.

*ஒவ்வொரு பிரிவிலும் 35 பேர் உள்ளடக்கப்படுவர்.நிர்வாகம் (சி.10421)


# கண்ணீர்ப் பயணங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று

கண்ணீர்ப் பயணங்கள் பாகம்1, பாகம்-2 வெளியீட்டு விழா இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு முருகுபாரி மகன் தலைமை தாங்கவுள்ளார்.


## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புக் கொண்ட மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316 (சி-10419)


# வவுனியாவில் அரச ஊழியர்களுக்கு காணி வழங்க ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாப் பிரதேச செயலகர் பிரிவில் கடமையாற்றும் வீடு, காணி அற்ற அரச ஊழியர்களுக்கு வீடு கட்டக் காணி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் வீடு, காணி அற்ற அரச ஊழியர்கள் காணி கோரும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தமது திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தலுடனும், தாம் தற்காலிகமாக வதியும் கிராம சேவை அலுவலரின் சிபார்சுடனும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10)


## தவறிவிட்டது

இல:153 புதிய புன்னை நீராவி, விசுவமடுவை வசிப்பிடமாகக் கொண்ட சோமசேகரம் கிருஸ்ணகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல: 752550913 V 30.09.2004 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் நீதிமன்ற வளாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி கூட்டுறவு அலுவலகத்தில் அல்லது ஈழநாதம் பணிமனை, யாழ்சாலையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
சோ.கிருஸ்ணகுமார்
(5144)


-மன்னார் கடற்பரப்பில்

# அநாதரவான படகிலிருந்து யெலிக்னைட் குச்சிகள் மீட்பு

மன்னார் பள்ளிமுனைக் கடலில நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் அநாதரவாகவும், சந்தேகத்திற்கிடமாகவும் கிடந்த ஒரு சிறிய பிளாஸ்ரிக் படகைச் சோதித்த கடற்படையினர் அப்படகுக்குள் 6 கிலோ யெலிக்னைட் குச்சிகளையும், 25 வெடிக்க வைக்கும் கருவிகளையும் கண்டு பிடித்தனர். உடனே அந்தப் படகையும் அந்தப் பொருட்களையும் கைப்பற்றி மன்னார் பொலிசாரிடம் இவர்கள் கையளித்தார்கள். (மி)

## பெறுபேறு

முல்லை மாவட்டத்தில் 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் மேலும் கிடைத்த பெறுபேற்றில் முல்லைத்தீவு றோ.க. வித்தியாலயத்தில் செல்வன் நவரட்ணம்- ரேணு-130 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 26 ஆவது நிலையினைப் பெற்றுக் கொண்டார். (20)

-மன்னார் மாவட்டத்தில்-

# வரட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

அண்மையில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக மன்னார்ப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புதுக்கமம், பருப்பங்கண்டல், உயிலங்குளம், வீராசேனை, உயிர்த்தராசங்குளம், ஆகிய கிராமங்களில் 150 குடும்பங்களைத் தெரிவு செய்து இக்குடும்பங்களுக்கு ஒருமாதத்திற்கான வரட்சி நிவாரணமாக 1460 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதனை இரண்டாகப் பிரித்து 730 வீதம் இரண்டு தடவைகளாக வழங்கப்பட்டுள்ளன. (மி)


## சாவு அறிவித்தல்

### இராசையா தியாகலிங்கம்

(கிராம சேவையாளர்)

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் இல:99 குடி மத்தியில் வசித்து வந்தவருமான இராசையா தியாகலிங்கம் (கிராமசேவையாளர்) அவர்கள் 28.09.2004 அன்று காலமாகிவிட்டார். இவர் அமரர்களான இராசையா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும்; அமரர்களான ஐயம்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்; பிறேமாவதி (ஆசிரியை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் தசரீதன், தனுசன், தாதிபன், தர்சிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசலட்சுமி (லண்டன்) நாகராசா (கனடா), தங்கலெட்சுமி (கொழும்பு), அன்னலட்சுமி (இராமநாதபுரம்), சொர்ணலட்சுமி (கனடா), சுந்தரலிங்கம் (கனடா), விஜயலட்சுமி (சுவிஸ்), பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தியாகராஜன் அமரர், இராஜேஸ்வரி (கனடா), கனகரத்தினம் அமரர், துரைசிங்கம் (இராமநாதபுரம்), நடேசபிள்ளை (கனடா), ரதினி (கனடா), விசுவலிங்கம் (சுவிஸ்), ஆனந்தி (கனடா), லலிதாம்பாள் (உருத்திரபுரம்), திருஞானம் அமரர், இராசேந்திரம் கனடா), சிவஞானம் (கனடா), புஸ்பலீலா (கனடா), இராஜேஸ்வரி (இந்தியா), உருத்திரன் (உருத்திரபுரம்), உதயகுமார் (கனடா), பாலகுமார் (கனடா), பாலகௌரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கந்தசாமி (உருத்திரபுரம்), இராஜசுந்தரி (கனடா), விக்னேஸ்வரி (கனடா), ஜெயராணி (கனடா), கயிலாயநாதன் (கனடா), திருஞானசம்பந்தன் (இந்தியா), சுசீலா (உருத்திரபுரம்), கனகரஞ்சிதா (கனடா), மனோகரி (கனடா), சிவராசா (கனடா) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3.10.2004 ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் இல.100 இல்லத்தில் நடைபெற்றுக் காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(4922) தகவல்: மனைவி,பிள்ளைகள்



## நெல் விற்பனைக்கான கேள்வி கோரல்

வவுனியா வடக்கு பல நோ.கூ.சங்கத்தில் இருப்பாக இருக்கும் முதல் தர சிவப்பு இன நெல்(2003/2004 காலபோக உற்பத்தி) 100000 கிலோ (பத்து லோட்) இற்கு மேற்பட்ட தொகை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்வி கோரப்படுகின்றது. கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய நெல் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் "தலைவர் வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம் ,நெடுங்கேணி என்ற முகவரிக்கு 07-10-2004ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் நேரடியாகவோ,பதிவஞ்சல் மூலமாகவோ தமது கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம். நெல்லைப் பார்வையிட விரும்புபவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் எமது களஞ்சியத்தில் பார்வையிடலாம். கேள்வியின் இடது பக்க மேல் மூலையில் "நெல் கொள்வனவுக்கான கேள்வி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

நிபந்தனைகள்

.......................

01.கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் 07-10 2004 ஆம் திகதி பி.ப.2.10 மணிக்கு கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாயிருத்தல் வேண்டும்.

02.நெல்லிற்கான கொடுப்பனவுகள் முழுவதும் பணமாகவே செலுத்தப்படல் வேண்டும். (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

03.தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 48 மணி நேரத்திற்குள் முழுப் பணமும் செலுத்தி நெல்லைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

04.கேள்விகள் பூரண விபரங்களுடன் தெளிவாக உறுதி மொழியுடன் அமைந்திருத்தல் வேண்டும் .(தெளிவற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

05.கேள்விப்பத்திரக் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

தலைவர்.
வ.வ.ப.நோ.கூ.சங்கம்.
(5143)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை

முதலாம் வருட கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான அறிவித்தல்.

*ஓகஸ்ட் மாதம் 09ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பின்வரும் பரீட்சைகள் ஒக்ரோபர் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும்.*

(1) முகாமைத்துவமும் முயற்சியாண்மைத்திறன்களும் (AMEA 11011)
(2) சமூக நல்லிணக்கமும் தொடர்பாடல் திறன்களும் (ACSA 11012)

மேலதிக விபரங்களைக் கலைப்பீட விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர் (சி. 10244)



## பதவி வெற்றிடம்

கொம்ரெக் நிறுவனம் கடந்த 15 வருடங்களிற்கு மேலாக தொழிற் பயிற்சியினை வழங்குகின்ற ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும். முல்லைத்தீவில் நடைபெற உள்ள பயிற்சிக்குக் கீழ்வரும் பதவி வெற்றிடமாக உள்ளது. பொருத்தமான தகைமையுடைய தச்சுத்தொழிலாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

**பதவி** :- தச்சுவேலை போதனாசிரியர் (carpentry instructor)
**வயது** :- 25-60
**முன் அனுபவம் விரும்பத்தக்கது**
**சம்பளம்** :- 18,000/ = + ஊழியர் சேமலாபநிதியம்

பதவி நியமனம் முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானது. உங்கள் விண்ணப்பப் படிவங்களை 12.10.2004 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்கிறோம்.

*திட்டமுகாமையாளர்,*
*கொம்ரெக்,*
*கைத்தொழில் பேட்டை,*
*பூந்தோட்டம்,*
*வவுனியா.*

(5141)

# ஈராக்கின் சமாரா நகரைக் கைப்பற்ற அமெரிக்கப் படையினர் தாக்குதல்

## -100 பேர் பலி பெருமளவானோர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கின் சமாரா நகரில் அமெரிக்கக் கூட்டணிப் படையினருக்கும், கிளர்ச்சிவாதிகளுக்குமிடையே




கடும் மோதல் இடம் பெற்று வருகின்றது.

நகரைக் கைப்பற்றுவதற்காக நேற்று முன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்கப் படைகளின் விமானத் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், நேரடி மோதல்களும் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் குறைந்தது 100பேர் பலியாகியுள்ளதோடு நூற்றுக்கும் மேலானோர் காயமடைந்துள்ளனர்.

தாக்குதலையடுத்து நகரத்தில் வாழ்கின்ற ஒரு இலட்சம் மக்கள் மின் விநியோகம், நீர் விநியோகம் எதுவுமின்றி இருக்கின்றனர். இது தொடர்பாக அமெரிக்க இராணுவம் தகவல் வெளியிடுகையில்,

தீவிரவாதிகளின் கேந்திரஸ்தானங்களான சமாரா, பலூஜா மற்றும் காதிய், ஹைசா என்பனவற்றைக் கைப்பற்றுவதன் மூலம் சனவரி மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு வழிவகுப்பதே தமது இலக்கு எனத் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க சனாதிபதிக்காக போட்டியிடுவோர் விவாதம்!

(வோஷிங்டன்)



அமெரிக்க சனாதிபதி தேர்தலினை முன்னிட்டு இதில் போட்டியிடும் வேட்பாளர்களான ஜோர்ஜ் டபிள்யு. புஷ் மற்றும் ஜோன் ஹெரி ஆகியோர் பங்கேற்ற நேரடி விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவர்கள் இருவரும ஈராக் விவகாரம் தொடர்பாக கடுமையான விவாதங்களில் ஈடுபட்டார்கள். சனாதிபதி புஷ் இந்த விடயம் தொடர்பாகத் தவறான முடிவை எடுத்திருப்பதாக ஜோன்ஹெரி குற்றஞ்சாட்டினார்.

மோசமான தருணங்களில் அமெரிக்காவை வழி நடத்தக் கூடிய ஆற்றல் இருக்கின்றதா? என்று ஜோர்ஜ் புஷ் ஜோன் ஹெரியிடம் கேள்வியெழுப்பினார்.

# 20 ஆண்டுகளில் ஏழைகள் எண்ணிக்கை உலகில் பாதியாகக் குறைவடைந்துள்ளது

## -உலக வங்கி அறிக்கையில் தகவல்

(வோஷிங்டன்)

**ஏழைகளின் எண்ணிக்கை கடந்த 20ஆண்டுகளில் பாதியாகக் குறைந்துள்ளதாக உலகவங்கி அறிக்கை தெரிவிக்கிறது. 1981ஆம் ஆண்டிலிருந்து 2001ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மக்களின் பொருளாதார நிலை குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.**

தினமும் ஒரு டொலருக்கும் குறைவாக வருமானம் உள்ளவர்களின் விகிதம், உலக மக்கள் தொகையில் 40 சதவீதத்திலிருந்து 21 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதன் மூலம் தெரிய வந்துள்ளது.

கடந்த காலம் நம்பிக்கை தருவதாக இருந்தபோதிலும் வறுமையை எதிர்த்து தீவிரமாகப் போராட வேண்டியதன் அவசியத்தையும் இந்த அறிக்கை உணர்த்துகிறது. ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் பின்வருமாறு,

உலக அளவில் வளர்ச்சி ஒரே சீராக இல்லை. ஆசியாவின் கிழக்கு, தெற்கு பகுதிகளில் ஏழைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. மத்திய, வட ஆபிரிக்காவிலும் ஏழைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

ஆபிரிக்காவின் பிறபகுதிகள், லத்தீன் அமெரிக்கா, கரிபியன் பகுதிகளில் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தற்போது உலகில் 600கோடி பேர் வசிக்கின்றனர். இவர்களில் 100கோடி பேர் பணக்கார நாடுகளில் வசிக்கின்றனர். இவர்களிடம் தான் 80சதவீத வளம் உள்ளது. மீதமுள்ள 500கோடி பேரிடம் 20 சதவீத வளம் உள்ளது.

பணக்கார நாடுகள் ஆண்டு தோறும் பாதுகாப்புக்காக ரூபாய் 62 இலட்சம் கோடிகள் செலவழிக்கின்றன. வளர்ச்சிக்காக ரூ.6 இலட்சம் கோடியை மட்டும் செலவழிக்கின்றன.

200கோடி பேருக்கு சுத்தமான நீர் இல்லை. 11.5 கோடி குழந்தைகளுக்குப் பள்ளிசெல்லும் வாய்ப்பில்லை. 3.8கோடி பேர் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 95 சதவீதம் பேர் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

2015ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியை அடைய வேண்டும் என்ற இலக்கைப் பெரும்பாலான நாடுகள் அடையாது.

அடுத்த 25 ஆண்டுகளில் உலக மக்கள்தொகை 200கோடி அதிகரிக்கும். அவர்களில் 50கோடி பேர் மட்டுமே பணக்கார நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். பெரும்பாலானோர் வறுமையின் பிடியில் சிக்கியிருக்கும் வாய்ப்பிருக்கிறது. வேலைவாய்ப்பில்லாத இளைஞர்கள் அதிகம் இருக்கும் பகுதிகளில் தீவிரவாதம் தலைதூக்க வாய்ப்பிருக்கிறது.

அடுத்த 10 ஆண்டுகளில் வளரும் நாடுகளுக்குக் கிடைக்கும் சுமார் 28 இலட்சம் கோடி ரூபாய் உதவியால் 14கோடி பேரை வறுமையின் பிடியிலிருந்து காப்பாற்ற முடியும்.

வறுமை ஒழிப்புக்கு அதிக நிதி திரட்டப்பட வேண்டும். அவை திறம் படச் செலவழிக்கப்பட வேண்டும். ஏழை நாடுகளின் கடன் சுமையைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும் என இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### குழந்தை பலி!

(ஹனோய்)

வியட்நாமில் பறவைக்காய்ச்சல் காரணமாக 14 மாத ஆண் குழந்தை இறந்தது. இதை ஹனோய குழந்தைகள் நல மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# வெளிநாட்டினர் கைரேகை பதிவு புதிய நடைமுறை அமுலாகியது

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நுழையும் பிற நாட்டினர் தங்களது கட்டை விரல் ரேகையைப் பதிவு செய்ய வேண்டும். புகைப்படமும் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நடைமுறை வியாழன் முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் 15 விமான நிலையங்களிலும் 14துறைமுகங்களிலும் இது அமுலுக்கு வருகிறது.

கனடா, மெக்சிக்கோ குடிமக்களுக்கு இந்த நடைமுறையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. பாஸ்போர்ட் மோசடி மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த கைரேகை முறை அமுலுக்கு வருவதாக அமெரிக்க மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர். வெளிநாட்டினர் அமெரிக்காவில் விமான நிலையம் அல்லது துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த பின் குடியேற்றத் துறை அலுவலகத்துக்கு வர வேண்டும். அங்கு வரிசையாக நின்று ஒருவர் பின் ஒருவராக ஒரு கண்ணாடி மீது கட்டை விரலை பதிய வைக்க வேண்டும. மை எதுவும் வைக்க வேண்டாம், கட்டை விரலை வைத்ததும் அதில் உள்ள ரேகைகள் கம்பியூட்டரில் பதிவாகும். பின்னர் பாஸ்போர்ட் விபரங்களுடன் அது சேர்க்கப்படும் இந்தப் பணி நடந்து கொண்டிருக்கும் போதே புகைப்படம் எடுக்கப்பட்டுவிடும். மொத்தம் 14 வினாடிகளில் பணி முழுவதும் முடிந்து விடும் என்று அதிகாரிகள் கூறினர்.

# அணுவாயுதங்கள், ஏவுகணைகளைத் தயாரிக்க ஈரானுக்கு இந்திய விஞ்ஞானிகள் உதவி!

## -சட்ட நடவடிக்கைக்கு அமெரிக்கா தயார்

(வோஷிங்டன்)

அணுவாயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் தயாரிக்க ஈரானுக்கு உதவி செய்துள்ளதாக அமெரிக்கா இரண்டு இந்திய விஞ்ஞானிகள் மீது குற்றஞ்சுமத்தி, நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர்களுடன் அமெரிக்க ஆயுத நிறுவனங்கள் எந்தத் தொடர்பும் வைத்திருக்கக் கூடாது என்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சு எச்சரிக்கை செய்துள்ளது.

அத்துடன் இந்த இரண்டு விஞ்ஞானிகள் மீதும் ஈரான் அணுவாயுதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

1999 முதல் ஈரானுக்கு அணு மற்றும் ஏவுகணைத் தொழில் நுட்பத்தை இவர்கள் வழங்கி வந்துள்ளதாக அமெரிக்கா குற்றஞ் சுமத்தியுள்ளது.

அத்துடன் சீனாவைச் சேர்ந்த 07 அணு ஆராய்ச்சி மற்றும் ஏவுகணை ஆராய்ச்சி நிறுவனங்கள், ரஷ்யா, உக்ரைன், ஸ்பெயின், வடகொரியா ஆகியவற்றின் தலா ஒரு அணு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# பலஸ்தீன அகதிமுகாம் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் தாக்குதல்

## 23பேர் பலி; 108 பேர் காயம்

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நடந்து வருகிறது. இந்த நிலையில் பலஸ்தீனர்களின் அகதிகள் முகாம் அமைந்துள்ள காஸாப்பகுதிக்குள் நேற்று முன்தினம் இஸ்ரேல் இராணுவம் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதைத் தொடர்ந்து. இரு தரப்பினருக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது.



லெபனான் பெய்ரூட்டில் நேற்று நடைபெற்ற குண்டுவெடிப்பில் எரியும் வாகனத்தை அணைக்க முயலும் தீயணைப்புப் படையினர். இதில் ஒருவர் பலியானார்.

இதில் 23 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 108 பேர் காயமடைந்தனர். இந்தப் பகுதியில் இருந்த 15 வீடுகள் புல்டோசர்கள் மூலம் இடித்துத் தள்ளப்பட்டன. புதன் கிழமை பலஸ்தீனப் போராளிகள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர். இதனையடுத்தே இஸ்ரேல் இராணுவம் ஆத்திரமடைந்து காஸாப் பகுதியில் உள்ள அகதி முகாமிற்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனிடையே இஸ்ரேலின் தென்பகுதியில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் இராணுவ வீரர்கள் இருவரையும், இஸ்ரேலியப் பெண் ஒருவரையும் சுட்டுக்கொன்றுள்ளனர். இதனால் மேற்குக் கரைப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதுடன நேற்று காஸாப்பகுதியில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.



சன்சல்வடோரில் திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா நேற்று முன்தினம் பிரார்த்தனை நிகழ்வொன்றில் கலந்து கொண்டுள்ளார்.

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு

# வன்னியில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள்

**சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வன்னிப்பகுதியெங்கும் பல்வேறு நிகழ்வுகள் சிறப்புற நடந்தேறியுள்ளன. இதனையொட்டி விளையாட்டு நிகழ்வுகள், சிரமதானங்கள், மரம் நடுகை எனப் பல் வேறு நிகழ்வுகள் பிரதேச ரீதியாக கடந்த வாரம் நடைபெற்றுள்ளன.**

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவில் அக் கராயன் பிரதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ் வொன்றினை நடாத்தியுள்ளன.



வட்டக்கச்சியில் நடைபெற்ற நிகழ்வு

(படங்கள் : ரூபன்)

சென்ற வியாழன் கந்தபுரம் டானியல் விளையாட்ட ரங்கில் பிரதேச முன்பள்ளிகளின் கூட்டமைப்புத் தலைவர் சி. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை கழக உதவிப் பணிப்பாளர் நல்லையாவும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுக் கொடியை முன்பள்ளிகளின் முதன்மை ஆசிரியர் திருமதி. மேரி திரேசாவும் ஏற்றி வைத்தனர். சிறப்புரையை சிவஞானசுந்தரம் நிகழ்த் தினார். மாலை 5.00 மணியளவில் வெற்றியீட்டிய மாண வர்களுக்கான பிரிசில் வழங்கலுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி வட்டக்கச்சி கிளி. கிழக்கு புனர்வாழ்வுக்கழகத்தினரால் இருபத்தி இரண்டு முன்பள்ளி சிறார்களுக்கிடையேயான விளை யாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இதில், தேசிய கொடியினை அரசியல்துறையைச் சேர்ந்த இராமஜெயம் ஏற்றிவைத்தார். நிறுவனக் கொடியை பிரபாகரனும் முன்பள்ளிக் கல்வி மேம் பாட்டுக் கொடியை கல்வி இணைப்பாளர் கௌசல்யா வும் ஏற்றிவைத்தனர்.

சிறார்களின் அசைவும், இசையும் நிகழ்வு உட்பட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

முன்னதாக இந்நிறுவனப் பணிப்பாளர்களினால் சென்ற புதன் வட்டக்கச்சி பொது வைத்தியசாலையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டதுடன் கல்மடுநகர், ஆலடி கிராமங்களில் முன்பள்ளிகளில் மரநடுகையும் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனமும், வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனமும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகள் புனர மைப்புச் செய்யப்பட்டன.

சன்னாசிப்பரந்தன் விண்ணகச் செல்வன் முன் பள்ளி, கற்குளம் மாலதி முன்பள்ளி, பாலமோட்டை திலீபன் முன்பள்ளி, பனிக்கநீராவி கம்பர் முன்பள்ளி ஆகியனவே புனரமைப்புச் செய்யப்பட்டன.

சிறுவர் கௌரவிப்பு உட்பட சிறுவர் தின கலை நிகழ்வுகள் பிரதேச ரீதியாக நடைபெற்றன.

முல்லை மாவட்டத்தில் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படும். காட்டா விநாயகர் முன்பள்ளி, ராகுலன் முன்பள்ளி, பற்றிசியா முன்பள்ளி, மாவீரர் முன்பள்ளி, வில்வன் முன்பள்ளி, சத்தியன் முன்பள்ளி, முரளி முன்பள்ளி ஆகிய ஏழு முன்பள்ளிகளிலும் சென்ற புதன் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பெற்றோர்கள், ஆசிரியர்கள் நிறு வனப் பணியாளர்கள் இச்சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். வியாழக்கிழமை இம்முன்பள்ளிகளில் பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. நேற்று சிறுவர் தின நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன. (12,20)

## சிறுவர் கலை விழா

கிளிநொச்சி ஆதவன் முன் பள்ளி 9 ஆம் ஆண்டு சிறுவர் கலை விழா கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற வுள்ளது. இதற்கு கல்வி நிலைய நிர்வாகி சி.மகேந்திரன் தலைமை வகிக்கிறார்.

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு முள்ளியவளையில் சங்கம நிகழ்வு

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும், 2 ஆம் லெப் மாலதியின் நினைவு நாளையும் முன்னிட்டு முல்லை மாவட்ட பெண்கள் அமைப் புக்களின் சங்கமம் இன்று காலை 9.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் முல்லை மாவட்டத்திலுள்ள சகல பெண்கள் அமைப்புக் களும் கலந்து கொண்டு கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவுள்ளார்கள் எனவும், இந்தச் சங்கம நிகழ்வு ஒவ்வொரு வருடமும் நடைபெறு கின்றது எனவும், முல்லை மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் ஏற்பாடு களைச் செய்துள்ளதாகவும், முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி வேழினி தெரிவித்தார். (20)

## திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு

பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தின் மண்டபத்தில் ஆசி ரியர் வினோதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சொற் பொழிவாற்றிய இப்பாடசாலை அதிபர் ஆ.சூசைநாதர் தனது உரையில் பெறறேர் ஆசிரியர் உறவை மேலும் வளப்படுத்துவதின் மூலம் வித்தியாலயத்தின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இக்கௌரவிப்பின் நோக்கமாகுமென்றார். முல்லை மாவட்டத் தமிழீழக் கல்விகழகப் பொறுப்பாளர் அறிவன்பன் சொற்பொழிவாற்றுகையில் இந்நிகழ்வு ஒரு கல்விவளர்ச்சியில் ஒருமுன்மாதிரி செயற்பாடாகக் கருதுகிறேன் என்றார்.மற்றும் தமிழீழ தேசிய கணக்காய்வு நாயகம் பாரி அவர்கள், துணுக்காய் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிளர் ஆகியோர் கலந்து விழாவை சிறப்பித்தனர்.(09)

## மன்னார் வைத்தியசாலைக்கு இரு வைத்தியர்கள் நியமனம்

மன்னார் வைத்திய சாலைக்கு புதிதாக இரு வைத்தியர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள். இதே வேளையில் பேசாலை கிராமிய வைத்தியசாலைக்கும் ஒரு வைத்தியர் நியமனம் செய்யப்பட்டார். அத்துடன் பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட மன்னார் வைத்தியசாலைக்கு 100 மில்லியன் ரூபாய் செலவில் 3 மாடிக் கட்டடங்கள் கொண்ட சத்திரசிகிச்சைக் கட்டடத் தொகுதி ஒன்று கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகவல்களைப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி.யூட்ரதனி அவர்கள் தெரிவித்தார். (மி)

## சர்வதேச சிறுவர் தினத்தில் சிறார்களுக்கு ஊக்கப் பரிசு



சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியால் இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 'எதிர்கால எழில்' என்ற சிறார் சேமிப்புக் கணக்குகளில் உண்டியல்கள் மூலம் சேமிப்புச் செய்த சிறார்களுக்கு சர்வதேச சிறுவர் தினத்தால் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவை ஊக்குவிப்புத் தொகையாக அவர்களின் சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கியுள்ளது. வங்கியின் எட்டுக் கிளைகளிலும் இச்சேமிப்புத் திட்டத்தில் இதுவரை 5000 சிறார்கள் இணைந்துள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் புதிய சேமிப்பு உண்டியல்கள் வழங்கப்படுகின்றன. இவ்வுண்டியல் மூலம் சேமிக்கப்படுகின்ற நிதியின் இருபத்தைந்து வீத தொகையை இரண்டு ஆண்டுகளுக்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகையாக வழங்கவுள்ளது. இதில் முதலாண்டுக்குரிய நிதியே தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர இவ்வாண்டின் இறுதியில் இரண்டாயிரம் ரூபா வுக்கு மேல் சேமிப்பைக் கொண்டுள்ளவர்களில் 100 பேர் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்குப் பாடசாலைக்கான உபகரணங்கள் பரிசாக வழங்கப்படவுள்ளன.

## கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்கள் ஆராய்வு

பூநகரி பிரதேசத்திலுள்ள கடற் றொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து கடந்த புதன்கிழமை ஆராயப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேசச் செயலக மண்டபத்தில் பிரதேசச் செயலர் மா. சிறீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற கடற்றொழில் சங்கம், கடற்றொழில் சமாசம் ஆகிய நிர் வாக உறுப்பினர்களிற்கு இடை யேயான கலந்துரையாடலின் போதேஇவ்விடயங்கள்ஆராயப்பட்டன.

அக் கலந்துரையாடலில் மீன வர்களின் பிரச்சினை தொடர்பாக வும், அதனைத் தீர்க்கும் வழி முறை கள் பற்றியும் ஆராயப்பட்டது. அத்துடன் முட்டையிடும் நிலை யில் உள்ள சினை நண்டு போன்ற கடல் வாழ் உயிரினங்கள் அழிக் கப்படுவது குறித்தும் ஆராயப்பட் டது. இவ்வகையான உயிரினங் களை குறைந்தது ஆறு மாத காலமாவது பிடிக்கப்படுவதைத் தடுக்க வேணடும் எனவும் பிர தேசச் செயலரால் வேண்டுகை விடப்பட்டது. கடல் ஆமை இனங் கள் வெகுவாக அழிக்கப்படுகின் றன எனவும், பள்ளிக்குடாப் பகுதி யில் இவ் ஆமை இனங்களைப் பாதுகாத்து அவற்றிற்கு ஓர் புக லிடம் (சரணாலயம்) அமைக்கப் பட வேண்டும் எனவும் கூறினார்.

## 100 அடி விலகி பயிர்ச் செய்கை மேற்கொள்க

முள்ளியவளைப் பிரதேசத் தில் பெரிய குளத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள் வோர்கள் குளத்திலிருந்து 100 அடி விலகி பயிர்ச் செய்கை மேற்கொள்ளுமாறு முள்ளிய வளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வன இணைப்பாளர் சு. றோபேட் தெரிவித்தார்.

அதனை மீறி பயிர்ச் செய்கை மேற்கொள்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வும் தெரிவித்தார். (20)

## மாட்டிறைச்சி விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை

முல்லை மாவட்டத்தில் கால்வாய் நோய் ஏற்பட்டத்தினால் சகல இடங்களிலுமுள்ள மாட்டிறைச்சி விற்பனை செய்யும் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. ஆனால், இந்த அறிவித்தல்களை மீறி பல இடங்களில் மாட்டிறைச்சி அடித்து விற்பனை செய்யப்படுவது தமக்குத் தெரிந்துள்ளதாகவும், எனவே, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முள்ளியவளைப் பிரதேச இணைப்பாளர் சு. றொபே ட் தெரிவித்தார். மாடுகளுக்குக் கால்வாய் நோய் ஏற்பட்டதே மாட்டிறைச்சி விற்பனைத் தடைக்குக் காரணம் எனவும் தெரிவித்தார். (20)

## முல்லை மாவட்டத்தில் கோழிகளுக்குத் தடுப்பூசி ஏற்றல்

முல்லை மாவட்டத்தில் கோழிகளுக்கான தடுப்பூசி மருந்தேற்றல், வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளில் அந்தந்தப் பகுதி கமநல கேந்திர நிலையங்களில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முள்ளியவளைப் பிரதேச இணைப் பாளர் சு. றொபேட் தெரிவித்தார். காலை 6. 00 மணிக்கு ஆரம்பித்து நண்பகல் 12.00 மணி மட்டும் தடுப்பு மருந்துகள் வழங்கப்படவுள்ளன. இதில் முல்லைப் பிரதேசக் கால்நடை வைத்தியர் சுகந்தினியும் இணைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தார். அந்தந்தப் பகுதிக்கு தங்கள் கோழிகளை கொண்டு சென்று தடுப்பு மருந்தூசியை போட்டுக் கொள்ளுமாறும் தெரிவித்தார். (20)

# முகமாலையில் போக்குவரத்து நேரம் அதிகரிப்பு; யாழ்.இராணுவத் தளபதியின் தகவலுக்கு மறுப்பு

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**முகமாலை சோதனைச் சாவடியூடாகப் போக்குவரத்தை மேலும் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்க சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ். சிறிலங்கா இராணுவ கட்டளைத் தளபதி வெளியிட்ட அறிவிப்பை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி மறுத்துள்ளார்.**

முகமாலை சோதனைச் சாவடியூடான போக்குவரத்து நேர எல்லையை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிப்புச் செய்வது குறித்துச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் தாம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருப்பதாகவும், இதற்கான தீவிர ஆலோசனைகளில், செஞ்சிலுவைச் சங்கத்தினரும் படைத்தரப்பும் ஈடுபட்டு வருவதாகவும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஆனால், முகமாலை சோதனைச் சாவடியூடான போக்குவரத்து நேர எல்லை அதிகரிப்புத் தொடர்பாக தமக்கு எதுவிதமான உத்தியோகபூர்வ அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி பெறா றொபேட் தெரிவித்துள்ளார்.

எனவே முகமாலைச் சோதனைச் சாவடியூடான போக்குவரத்து நேர எல்லை அதிகரிப்புத் தொடர்பாகப் படைத்தரப்பால் வெளியிடப்படும் கருத்துக்கள், தகவல்கள் என்பன யாழ்.வன்னி மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு நடவடிக்கை எனப் பல மக்கள் அமைப்புகளும், மக்களும் ஆட்சேபம் தெரிவித்துள்ளதுடன்

முகமாலைச் சோதனைச் சாவடியூடான போக்குவரத்து நேர எல்லை அதிகரிப்பு விடயத்தில் அரசு நேர்மையாகச் செயற்பட வேண்டும் எனவும் மக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## பிற்போடல்

மன்னாரிலுள்ள மக்கள் வங்கியில் 1983 ஆம் ஆண்டு பொது மக்களால் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் இம்மாதம் முதல் கிழமை ஏலத்தில் விற்பனை செய்யத்தீர்மானிக்கப்பட்ட போதிலும் மன்னார் பிரஜைகள் குழுவினரின் வேண்டுகோளிற் கிணங்க 3 மாதங்கள் பிற்போடப்பட்டுள்ளன. (மி)

## தீவகத்தில் குழாய் மூலமாக நீர் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள வேலணை சரவணை,ஊர்காவற்றுறை உள்ளிட்ட தீவகத்தின் பல பகுதிகளிலும் குழாய் மூலமாக குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டு நிலைமையைக் கவனத்தில் கொண்டே குழாய் மூலமாக இப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க யாழ்.அரச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தீவகத்தில் உள்ள பல இடங்களிலும் சுத்தமான குடிநீரைப் பெற முடியாததனால் அப்பகுதி மக்கள் அதிகளவில் தொற்று நோய்களின் தாக்கங்களுக்கு இலக்காகும் நிலை காணப்படுகிறது. (33)

## யாழ்.நூதனசாலையை பராமரிக்க வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நூதனசாலை பராமரிப்பற்ற நிலையிலுள்ளமை குறித்து கவலை வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண தொல்பொருள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் தொல்பொருள் நூதனசாலை பல வருடங்களாக எவ்வித பராமரிப்பும், அபிவிருத்தியுமின்றி இருந்து வருவது குறித்து யாழ். வரலாற்று ஆர்வலர்களும், பொது மக்களும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நாவலர் வீதியில் நாவலர் கலாசார மண்டபத்தின் பின்புறத்திலுள்ள யாழ். நூதனசாலையானது தூசும், கறையும் படிந்த நிலையிலுள்ளது.

இதேபோன்று நல்லூர் சங்கிலிய அரசனின் முகப்பு வாசல், மந்திரிமனை, ஜமுனா ஏரி, அச்சுவேலித் தேவாலயம் ஊர்காவற்றுறை கோட்டை, சங்கானைத் தேவாலயம், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, மாதகல் சாப்பில்துறை, கந்தரோடை தூபிகள் போன்றவை போதிய பராமரிப்பு இன்றி இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு நாடகப் போட்டி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.இணுவில் கிழக்கு கலா ஜோதி சனசமூக நிலையத்தால் நாடகப் போட்டி ஒன்று நடத்தப் படவுள்ளது.

தமிழ்த் தேசியம், இனவிடு தலைப் போராட்டம், மாவீரர்களது தியாகம், மக்கள் சந்தித்த இழப்புக்கள், மற்றும் சமகால, கடந்த கால அரசியல் நிலைவரங்கள். என்பவற்றைக் கருப் பொருளாகக் கொண்ட நாடகங்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளன.

30 நிமிடங்களுக்கு உட்பட்டு அமையவேண்டிய நாடகங்களை போட்டியில் பங்கு கொள்ள வைக்க விரும்பும் நாடக இயக்குனர்கள் அல்லது ஆசிரியர்கள் தமது நாடகங்கள் பற்றிய விபரங்களுடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## மல்லாகத்தில் மிதி வெடிகள் அகற்றும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மல்லாகம் பகுதியில் உள்ள விவசாயக் காணிகளுள் படையினரால் புதைத்துவைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் டென்மார்க் நாட்டின் டெனிஸ் மிதிவெடிகளை அகற்றும் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி பகுதியில் உள்ள விவசாயக் காணிகளில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளால் அந்நிலப்பரப்புகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள முடியாது விவசாயிகள் பல்வேறு பின்னடைவுகளையும் சந்தித்து வந்தனர். இதனைக் கவனத்திற் கொண்டே கடந்த வாரம் முதல் அப்பகுதிகளிலிருந்து மிதி வெடிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(33)

## மாகாண தமிழ் இலக்கிய விழாவின் ஈழத்தின் கல்வி சார் ஆய்வரங்கு

ஒக்டோபர் 9,10,11,ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி,பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 2004- தமிழ் இலக்கிய விழாவின் மூன்று நாட்களும் காலையில் ஈழத்தின் கல்வி அறிவியல் சார் எழுத்துக்கள்-வரலாற்று விமர்சன நோக்கு என்ற பொருளில் ஆய்வரங்கு இடம் பெறும்.

ஒக்டோபர் 9 ஆம் திகதி டாக்டர் கிறீன் அரங்கில் நடைபெறும் ஆய்வரங்கிற்கு, கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமை வகிப்பார்.

ஆய்வாளர்கள் கலாநிதி க.ரகுவரன் ''மேல் நாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவு இலக்கியப் பாரம்பரியம்''

ஈஸ்வரநாதப்பிள்ளை குமரன் "போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் கல்வி சார், அறிவியல் சார் நூல்கள்" அதிவண கலாநிதி எஸ்.ஜெபநேசன் "பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மிஷனரிகளின் செயற்பாடு'' ஒக்டோபர் 10 ஆம் திகதி ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அரங்கில் நடைபெறும் நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் க.சண்முகதாஸ் தலைமை வகிப்பார். பாட நூல்களில் பெண்கள் பற்றி பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு "நாவலர் கல்வி முறை" பற்றி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், "1900-1950 காலப்பகுதியில் பாடப் புத்தகங்கள் துணைப்பாடப் புத்தகங்கள் பற்றி கலாநிதி செ.யோகராசா தமிழ் மொழிக் கல்வி- மொழிப்பெயர்ப்புகள் கலைச்சொல்லாக்கம்'' பற்றி பேராசிரியர் சபாஜெயராசா ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கில் நடைபெறும் நிறைவு நாள் நிகழ் வுக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமை வகிப்பார். பேராசிரியர் சோ. சந்திரசேகரன் செம்பியன் செல்வன், ரமீஸ் அப்துலா ஆகியோர் முறையே "தமிழ் மொழிக்கல்வியியல் எழுத்துக்கள்" கல்வியியல் நோக்கு நவீன போக்குகள்" "கல்விசார் இஸ்லாமிய - அரபுப் பாடநூல்கள் சில அவதானங்கள்" ஆகிய பொருள்களில் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

## சிறிலங்கா அரசின் மனித உரிமைகள் அவ்வப்போது தெளிவுபடுத்தப்படுகிறது!

### காணாமற்போனோரின் பெ.கு.அ அமைப்பு கண்டனம்

(வடமராட்சி)

மனித உரிமைகளுக்கான சாசனங்களை தாங்கள் அமுல்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் சிறிலங்கா அரசு, இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளையே தாக்கியுள்ளது. இதன் மூலம் சிறிலங்கா அரசின் மனித உரிமைகளைப் பேணுதல் என்னவென்பது உலகிற்குத் தெரியும என காணாமற்போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தவர்களுக்கான அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

அவ் அமைப்பின் யாழ் மாவட்ட இணைப்பாளர் எஸ். மோகன் ஒப்பமிட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் தாக்கப் பட்ட சம்பவத்தினைக் கண்டித்து மகஜரொன்றை ஊடகங்களிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இவ்வாறானதோர் சம்பவங்கள் எதிர்வரும் காலங்களில் இடம் பெறாதிருப்பதனை அனைத்துத் தரப்புகளும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இதனிடையே யாழ். பொலிஸ் நிலையத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தினை புதிய சனநாயகக் கட்சியும் கண்டித்துள்ளது. இவ்வாறானதோர் சூழலில் சாதாரண பொதுமக்களது மனித உரிமைகள் எவ்வாறு பேணப்பட முடியுமெனவும் அக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடாத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரும் மகஜரொன்றை நீதிக்கும், சமாதானத்திற்குமான கத்தோலிக்க ஆணைக்குழு சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது. (27)

## நேரியகுளம் வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி திறப்பு

(வவுனியா செய்தியாளர்)

நேரியகுளம் பிரதேச வைத்தியசாலையில் ஐந்து மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மகப்பேற்று விடுதி கடந்த செவ்வாய் பிற்பகல் 1.00 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு அவசர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இவ்விடுதித் திறப்பு விழா நிகழ்வு, வவுனியா மாகாண சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஏ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மகப்பேற்று விடுதியினை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை திறந்து வைத்தார். (10)

## 8 தமிழ் அறிஞர்கள் கௌரவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடத்தும் 2004 மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டுதமிழ் அறிஞர்கள் ஆளுநர் விருது வழங்கப்பட்டு, கௌரவிக்கப்படவிருக்கின்றார்கள்.

மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம், ஆளுநர் விருது பெறும் எட்டுத் தமிழறிஞர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளார்.

எட்டுத் தமிழறிஞர்களின் பெயர்கள் வருமாறு. இரா.சடாட்சரதேவி (குந்தவை), எஸ்.எல்.எம்.ஹனிபா, வயிரமுத்து சிவசுப்பிரமணியம், மு.கனகசபை, கே.எஸ்.சிவகுமாரன், குழந்தை ம.சண்முகலிங்கம், பி.ஸ்ரனிஸ்லாஸ், அரியான் பொய்கை கை.செல்லத்துரை

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் அக்டோபர் மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் 2004 தமிழ்இலக்கிய விழாவின் நிறைவு நாள் (ஒக்டோபர்11) நிகழ்வின் போது எட்டுத் தமிழறிஞர்களும் ஆளுநர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.நிறைவு நாள் நிகழ்வின் போது இலக்கிய நூல் பரிசு பெற்ற படைப்பாளிகளும் கௌரவிக்கப்படவுள்ளனர். (25)

# இதய இரத்த நாளங்கள், தசைகளை இயற்கையாகவே மீண்டும் உருவாக்கலாம்



இதய ரத்த நாளங்கள் மற்றும் தசைகள் ஒரு முறை செயலிழந்து விட்டால், பாதிக்கப்பட்டு விட்டால் அவற்றை மறுபடியும் பழையபடி உருவாக்க முடியாது என்றும், வேண்டுமானால் மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், இந்தக் கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். ஆம்...! இதய ரத்த நாளங்கள் மற்றும் தசைகளை இயற்கையாகவே மறு படியும் உண்டாக்க முடியும் என்று பிரேசில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மருத்துவ உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கும் இந்த செய்தி பல்வேறு ஆய்வுகளின் மூலம் இன்னும் உறுதி செய்யப்படும்போது மனிதனுக்கு மிகப் பெரிய பரிசு கிடைக்கும். அதாவது இதயம் செத்துவிட்டது. (நாளங்கள், தசைகள்) இனி அவ்வளவுதான் என்று நினைக்க வேண்டியதில்லை. இதய ரத்த நாளங்களை, தசைகளை மீண்டும் உருவாக்கிவிட முடியும். அதுவும் இயற்கையான முறையி லேயே. ஸ்ரெம் செல்கள்தான் இந்த அற்புதத்தைச் செய்கின்றன. நம் முடைய எலும்பு மஜ்ஜை பகுதியில் நிறையக் காணப்படும் இந்த செல்க ளால் ரத்த வெள்ளை அணுக்கள், ரத்த நாளங்கள், இதய செல்கள் ஆகியவற்றை மறுபடியும் உண்டாக்க முடியும். இதன் மூலம் நிறைய வகையான இருதய அறுவைச் சிகிச்சைகளுக்கு அவசியமே இல்லாமல் போய்விடும். இதைப் பிரேசிலைச் சேர்ந்த டோஹ்மான் என்ற மருத்துவ நிபுணர் ஆய்வுப் பூர்வமாக நிரூபித்துள்ளார்.

அவர் கடந்த 2001ஆண்டு டிசம்பர் முதல் 2003 ஆண்டு கடைசி வரை 14 நோயாளிகளுக்கு 2 விதமான சிகிச்சை அளித்தார். கொஞ்சப் பேருக்கு ஸ்ரெம் செல்களைப் பயன்படுத்தியும், கொஞ்சப் பேருக்கு சாதாரண மருந்துகளைப் பயன்படுத்தியும் மீதிப் பேருக்கு எந்த விதமான சிகிச்சையும் அளிக்காமல் இருந்தார். இதில் ஸ்ரெம் செல்களைப் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கப்பட்ட ஒரு நோயாளி சிகிச்சை ஆரம்பித்த 11 மாதத்துக்குப் பிறகு பக்கவாத தாக்குதல் காரணமாக உயிரிழந்தார். அவரது உடம்பை ஆட்டோப்சி சோதனை எடுத்துப் பார்த்தபோது இதயத்தில் புதிய ரத்த நாளங்களும், இதயத் தசைகளும் புதிதாக வளர்ந்து இருப்ப தைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

# சோதனைக் குழாயில் ஆடு இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கினர்

சோதனைக் குழாயில் ஆடு ஒன்றை தயாரித்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை நிகழ்த்தியிருக்கிறார்கள். கர்னாலில் உள்ள தேசிய பால் வள ஆய்வு மைய விஞ்ஞானிகளே இதனை உருவாக்கியுள்ளனர். டாக்டர் துருபா மலாக்கர், எஸ்.கெ தாஸ், எஸ்.ஐ. கோவாமி ஆகியோரே இவற்றை உருவாக்கியுள்ளனர். இறைச்சிக் கடையிலிருந்து பெண் ஆட்டின் கருமுட்டையை சேகரிதது அதிலிருந்து அதனை உருவாக்கியுள்ளனர்.

# விலங்குகள் மூலம் பரவும் புதிய ஆட்கொல்லி நோய்கள்

விலங்குகள் மூலம் மனிதர்களுக்கு மேலும் பல உயிர்க் கொல்லி நோய்கள் பரவக்கூடிய அபாயம் அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. அதிலும் குறிப்பாக ஆசிய நாடுகளில் இத்தகைய நோய்கள் தாக்குவதற்கான வாய்ப்புகள் மிக மிக அதிகம் என்று அந்நிறுவனம் கூறியுள்ளது. "ஆசியாவில் தோன்றி உலகையே அச்சுறுத்தக்கூடிய இத்தகைய நோய்களின் மூலக்கூறுகளை முளையிலேயேகிள்ளி எறிய வேண்டும். இதனால் உலகம் முழுவதும் பயன்பெறும்," என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் மேற்கு பசுபிக் பிராந்திய அலுவலக இயக்குநர் ஷிகெரு ஓமி ஷாங்காயில் தெரிவித்துள்ளார்.

சார்ஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் பறவை மற்றும் விலங்குகளிடம் இருந்து தோன்றியவை. இது மனிதர்களுக்குப் பரவி ஏராளமான உயிரிழப்பை ஏற்படுத்தியது. இதைத் தடுக்கும் வகையில் பறவை மற்றும் விலங்குகளின் இனப்பெருக்கம் மற்றும் அவற்றின் இறைச்சியை சந்தைப்படுத்தல் போன்ற விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பு, விலங்குகளுக்கான உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

# மனித சாம்பலிலிருந்து வைரம் தயாரிக்கும் நிறுவனம்

மனித சாம்பலில் வைரங்கள் தயாரிக்கும் முறை தற்போது அறிமுகமாகி வருகிறது. லைப் ஜெம் எனும் அமெரிக்க நிறுவனம் இத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. இந் நிறுவனம் இறந்தவர்களின் சாம்பலில் உள்ள கார்பனிலிருந்து வைரங்களைத் தயாரிக்கிறது. ஆனால் இது எல்லோராலும் முடியாத காரியம். ஏனெனில் அந்த வைரங்களைத் தயாரிக்க செலவு அதிகம். எனினும் இதை விரும்பி நாடி வருகின்றனர் பலர்.

சாம்பலை வைரமாக்கும் நிறுவனத்தின் வெப்சைட் Http: www. lifegem. com/ இந்தத் தளத்தில் நீங்கள் விரும்பிய நபரின் கார்பன் துகளிலிருந்து வைரங்களை உருவாக்கித் தருகிறோம் என்ற தகவல் முதல் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.



உங்கள் அன்பைப் பெற்றவர் வைரமாக உங்களுடனே அணிகலனாகத் திகழ்வார் என்றும் இத்தளம் குறிப்பிடுகிறது. உங்கள் அன்பைப் பெற்ற அவர் வாழ்நாள் முழுவதும் கூட இருப்பார் என்றும் இத் தளம் தெரிவிக்கிறது.

இந்த வைரங்களைப் பற்றிய குறிப்புகள் விலை, தொடர்பு கொள்ள வேண்டிய இடங்கள், இந்நிறுவனம் அளிக்கும் வைரத்துக்கான தரச் சான்றிதழ், நிறுவனத்தின் வரலாறு, பொதுவாக எழும் சந்தேகங்கள் ஆகியன தனித் தனியாக இத்தளத்தில் விளக கப்படுகின்றன. இயற்கையில் கிடைக்கும் வைரத்தைப் போலவே, இதுவும் அத்தனை அம்சங்களிலும் இணையாக விளங்கு கிறது என்று இந்நிறுவனம் கூறுகிறது.

# தென்னாபிரிக்க பள்ளத்தாக்கில் ஏன் தங்கம் அதிகமாக உள்ளது?

120 வருடங்களுக்குள் தோண்டியெடுக்கப்பட்ட தங்கத்தில் சுமார் 40 சதவீதம் தென்னாபிரிக்காவில் இருக்கும் "ராண்ட்" என்ற இடத்தில் இருக்கும் சுரங்கத்திலிருந்தே எடுக்கப்பட்டது. இது விட்வாட்டர்ஸ் ராண்ட் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது. உலகத்தில் இருக்கும் தங்கத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கு தங்கம் தோண்டப்படாமல் இந்த ஒன்பது மில்லியன் ஏக்கர் பரப்பில் இருக்கும் இந்தப் புராதன ஏரியின் படுகையில் தான் இருக்கிறது என்று அறிவியலாளர்கள் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

எனினும் ஏன் இங்கு இவ்வளவு தங்கம் கிடக்கிறது என்பதை ஆராய்ச்சி செய்வது எப்போதுமே விவாதத்துக்குரிய விடயமாகவே இருக்கிறது. இதனை இரண்டு தேற்றங்கள் விளக்க முற்படுகின்றன. முதலாவது அருகாமையில் இருக்கும் மலைகளில் இருக்கும் தங்கத்தை ஆறுகள் அடித்து வந்து இங்கு படியவைத்திருக்கின்றன என்று கூறுகிறது. இரண்டாவது சூடான தண்ணீர் பூமிக்கடியிலிருந்து மேலே வரும்போது தங்கத்தை எடுத்து இங்கு படுகையாக்கியிருக்கிறது என்று கூறுகிறது.

இந்த விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும்பொருட்டு கிர்க் எனும் ஆராய்ச்சியாளர் மற்றும் இவரது தோழர்கள் ஆஸ்திரேலியாவிலிந்தும் பிரிட்டனிலிருந்தும் வந்து இந்த தங்கத்தின் வயதினை கணக்கிட முடிவு செய்தார்கள். அருகாமையில் இருக்கும் பாறைகளின் வயதினை விட தங்கத்தின் வயது கூடவா குறைவா என்பதை ஆராய முடிவு செய்தார்கள். தங்கம் பாறைகளை விட வயது குறைவாகவே இருந்தால் அது சுடுநீரின் மூலம் வந்த மாதிரியை சரி எனக் கூறும்.

# கணினி மூலம் இயக்கப்படும் கார்

இங்கு காணப்படுவது கணினி மூலம் இயக்கப்படும் (சாரதி யில்லாத) வாடகைக்காராகும். இந்தக் கார் அதற்காக உரு வாக்கப்பட்ட பாதையில் பயணிக்கும் எனினும் பயணி ஒருவர் எங்கு வேண்டுமாயினும் எப்போதும் இதில் பிரயாணம் செய்யலாம். இதற்கான பாதையின் அகலம் 1.5 மீற்றராகும். இது சாதாரண காரை விட 75 வீதமும், பஸ்வண்டியை விட 50 வீதமும் குறைவான எரிபொருள் உதவி யுடன் செயற்படும். இதன் மணித் தியால வேகம் 25 மைல்களாகும். விபத்துக்களில் இருந்து பாது காக்கும் கவசங்களும் இதற்கு உண்டு. அத்துடன் அதன் பாதையில் வேறு வாகனங்கள் அல்லது பாதசாரிகள் குறுக்கிடுவதை அவதானிக்கும் கருவியொன்றும் பொருத்தப்பட்டுள்ளது. இவ் வாகனத்தினால் சூழல் மாசுபடாது எனக் கூறப்படுகிறது. "நாசா" நிறுவனத் தயாரிப்பான இது பற்றி மேலும் ஆய்வுகள் நடத்தப்பட்டு 2006 ஆம் ஆண்டு பாவனைக்கு விடப்படும் என நிறுவனம் தெரிவிக்கின்றது.




# தாஜ்மகாலின் பிறந்த தினம்



உலக அதிசயங்களில் ஒன்றாகப் போற்றப்படும் தாஜ்மகாலின் 350 ஆவது பிறந்த தினம் கடந்த 27 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. உத்தரப் பிரதேசத்திலுள்ள ஆந்திராவில் மொகலாய மன்னர் ஷாஜகானால் தன் காதலி மும்தாஜ் நினைவாகக் கட்டப்பட்ட இதன் 350 ஆவது நினைவு தினத்தை பெருமளவான மக்கள் கொண்டாடினர்.

# மீனினங்கள் அருகி வருவதால் கடல் சூழலுக்குப் பெரும் ஆபத்து

ஹாலி பெக்ஸ்சிலுள்ள நோவாஸ் கோட்டியா டாலஹவுசி பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானிகளான றென்சன் மயர்ஸ், போரிஸ் சோம் ஆகியோர் கடல் வாழ் மீன்கள் வேகமாக அருகி வருவதாக கூறியுள்ளனர்.

உலகில் சமுத்திரங்கள் பாரியளவில் காணப்படினும் மீன்கள் வாழக்கூடிய பிரதேசங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. அத்துடன் பாரிய இழுவைப்படகுகள் மூலம் பெரிய மீன்கள் பிடிக்கப்படுவதாலும், சிறுகண்ணுள்ள வலைகள் மூலம் மீன்குஞ்சுகள் பிடிக்கப்படுவதாலும் மீன்களின் பெருக்கம் குறைவடைகின்றன. வட அத்திலாந்திக் சமுத்திரம் (Grand Bank) கிரான்ட் பாங் பிரதேசத்தில் சுமார் மூன்று நான்கு தசாப்தங்களுக்கு முன்பு கொட், டுனா, வாள் கொப்பரா, சுறா போன்ற பெரிய மீனினங்கள் அதிகமாகக் காணப்பட்டன. எனினும் தற்போது அண்மைக் காலங்களில் அவை குறைந்து காணப்படுகின்றன. இவை அருகி வருவதால் கடல் பிரதேச சூழலுக்கும் மாசு ஏற்படுவதாக கடல் வள உயிரியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சமுத்திரத்தின் உட்பகுதியில் 100 மீற்றர் தொலைவிற்கு சூரிய ஒளி கிடைப்பது குறைவதும், மீன்களின் வாழ்க்கைச் சூழலை கட்டுப்படுத்துவதாக அமைகிறது. அத்துடன் அவற்றுக்குத் தேவையான சுத்தமான பிராணவாயு (ஒட்சிசன்) கிடைப்பதிலும் தடையேற்படுவதால் மீன்கள் குறைவடையக் காரணமாவதாகக் கூறப்படுகின்றது.

# சர்வதேச சிறுவர்தின நிகழ்வில்...







கிளிநொச்சியில் வரவேற்பு நிகழ்வு







கிளிநொச்சியில் கலைநிகழ்வும் விளையாட்டுப் போட்டியும்



வீடியோ விவரணத் தொகுப்பு வெளியீடு





புதுக்குடியிருப்பில் நடைபெற்ற ஊர்வலம்

(படங்கள்:சோ.ச.08)

## கராத்தே பயிற்றுனருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு



சென்சி லீ.சிமித் என்பவர் கிளிநொச்சியில் தமிழீழத்தின் எட்டு மாவட்டத்தையும் உள்ளடக்கிய 02 நாள் கராத்தேப் பயிற்சி வகுப்பை முடித்து நாடு திரும்பும் போது அவரை அரசியல் துறை சமாதான செலகத்தில் வைத்து இரண்டு புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட விருதுகளை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும், தமிழீழ விளையாட்டுத் துறை பொறுப்பாளர் கி.பாப்பாவும் வழங்கி கௌரவித்தனர். இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் கராத்தே சம்மேளனத் தலைவர் இரட்ணசோதி மாஸ்ரர் விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ச.தீ)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியோர்

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நேற்றுக் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற சிறார்களதும் இல்லங்களதும் பெயர் விபரம் பின்வருமாறு.

9 வயது 50 மீற்றர் ஓட்டம் ஆண்கள் 1.ஜெ.நிசிபரன்-நவஜீவனம், 2.வி.தினேஷ்-புனிதபூமி, 3.க.சுஜிகரன்-புனிதபூமி

9 வயது 50 மீற்றர் பெண்கள் 1.சி.தனோஜா-இனிய வாழ்வு இல்லம், 2. பி.லக்சி-பாரதி இல்லம், 3.ச.செல்வகுமாரி-குருகுலம்

11 வயது 100 மீற்றர் ஆண்கள். 1.க.ஜெகதீபன்-காந்தி நிலையம், 2.க.பேரின்பராஜ்-நவஜீவனம், 3. ஏ.ஜேசுபா-காந்தி நிலையம்

11 வயது 100 மீற்றர் பெண்கள் 1.ஆ.கலைச்செல்வி-குருகுலம், 2.சி.வினோதப்பிரியா-குருகுலம், 3.வி.தாமரா-செஞ்சோலை

13 வயது 100 மீற்றர் ஆண்கள் 1.செல்வன் றீன்ரன்-நவஜீவனம், 2.ந.தேவகுமார்-நவஜீவனம், 3.இ. பாலச்சந்திரன்-ஆரோபணம்.

13 வயது 100 மீற்றர் பெண்கள் 1.சி.டாரினி-குருகுலம், 2.கா.சுதர்மிளா-குருகுலம், 3.ம.றீவிதா-பாரதி.

உதைபந்து காந்தரூபன் எதிர் ஆரோபணம் 1:0 காந்தரூபன் இல்லம் வெற்றியீட்டியது

வலைப்பந்து குருகுலம் எதிர் கல்வி தொழிற்கல்வி 14:9 புள்ளி அடிப்படையில் குருகுலம் வெற்றியீட்டியது.

கிளித்தட்டு ஆண் நவஜீவனம் எதிர் காந்தி நிலையம் 2:1 புள்ளி அடிப்படையில் காந்தி நிலையம் வெற்றியீட்டியது.

பெண் குருகுலம் எதிர் செஞ்சோலை 3:2 புள்ளி அடிப்படையில் குருகுலம் வெற்றியீட்டியது.

கிறிஸ்கம்பம் ஏறுதல் இ.விமலன்-காந்தி நிலையம்

முட்டி உடைத்தல் 1.எ.கெறோம்-புனித பூமி, 2.நிஷாந்த குமார்-காந்தி நிலையம், 3.ராஜ்-கல்வி தொழிற்கல்வி (சோ)

## ஒன்று கூடக் கோரல்

(யாழ்)

யாழ்.குடாநாட்டில் பணியாற்றி வரும் அஞ்சல் திணைக்கள அதிகாரிகளுக்கும், தமிழீழ நிர்வாக சேவையினருக்கும் இடையே முக்கிய சந்திப்பு ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள தமிழீழ நிர்வாக சேவையினரது நடுவப்பணியகத்தில் இடம்பெறவுள்ளது.

இச் சந்திப்பிற்காக கிளிநொச்சி செல்ல வேண்டிய அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் அனைவரையும் அன்றைய தினம் காலை 8 மணியளவில் பிரதான தபாலகத்தில் ஒன்று கூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாணசபை.

# வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

"ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி கோரல் இல-06

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேகைளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/NECORD/ED/25/02 | முல்/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் 110'X25' மாடிக் கட்டட நிர்மாணம் | M6 | 57,000.00 |
| 02. | MU/NECORD/ED/26 | முல்/விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 110'X25' ஒரு மாடி வகுப்பறைக் கட்டட மீள் நிர்மாணம் | M6 | 57,000.00 |
| 03. | MU/NECORD/ED/27 | முல்/புதுக்குடியிருப்பு றோ.க. பாடசாலையில் 110'X25' ஒரு மாடி வகுப்பறைக் கட்டட மீள் நிர்மாணம் | M6 | 57,000.00 |
| 04. | MU/NECORD/HS/04 | ஒஒமடு சித்த ஆயுர்வேத மருந்தகக் கட்டட நிர்மாணம் | M7 | 24,000.00 |
| 05. | MU/NECORD/HS/08 | ஒட்டுசுட்டானில் மருத்துவ அதிகாரிகளுக்கான விடுதி மீள் நிர்மாணம் | M8 | 12,500.00 |
| 06. | MU/NECORD/LS/01/02 | முல்லைத்தீவு அரச மிருக வைத்தியர் விடுதி கட்டடம் நிர்மாணம் | M7 | 30,000.00 |
| 07. | MU/NECORD/ID/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் பதவி நிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்களுக்கான 10 அறை கொண்ட விடுதி அமைத்தல். | M6 | 83,500.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II .இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD) டுடன் மேற்படி M-7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது 01.07.2003இற்குப் பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர் திருப்திகரமான ஒத்ததன்மையினால் வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். முழு வேலைகளும் வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு அனுமதிக்கப்படும் ஆகக்குடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003 இற்குப் பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருந்தால் எந்த ஒரு நேரத்திலும் ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு NECORD திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஒக்டோபர் 06ஆம் திகதியிலிருந்து 2004 ஒக்டோபர் 15ஆம் திகதி வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ஒவ்வோர் வேலைக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று இதன் முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2004 ஒக்டோபர் 19 முற்பகல் 10.00க்கு நடைபெறும்.

08. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

09. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2004 ஒக்டோபர் 26முற்பகல் 10.00மணிக்கு முன்பதாகக்கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

திருமதி இமெல்டா சுகுமார் தலைவர்,
மாவட்டகேள்விச்சபை/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-10447)

# சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறுவதை இல.பெரும்பான்மையினத்தவர் விரும்பவில்லை

## தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறுவதை இலங்கையிலுள்ள பெரும்பான்மையினத்தவர் விரும்பவில்லை என்று கூறியுள்ள தி.மு.க தலைவர் கருணாநிதி, அதனை முறியடித்து திட்டத்தை நிறைவேற்றுவது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும் என்றும் கூறியுள்ளார்.

மத்திய கப்பல் துறை மற்றும் வீதிப்போக்குவரத்து அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் நிகழ்வொன்று நடைபெற்றது.

இதில் 4கோடியே 30 இலட்சம் பெறுமதியான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய தி.மு.க தலைவர் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மத்தியரசு 100 நாட்களுக்குள் பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது என்று கூறியுள்ளார்.

அத்துடன் 130 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்களாலும், அறிஞர்களாலும் வலியுறுத்தப்பட்டு வந்த சேது சமுத்திரத்திட்டம் தற்போது நனவாகியுள்ள நிலையில் இத் திட்டத்தைத் தடுக்க சிங்களவர்கள் முயல்வதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பவளப்பாறைகள் பாழாகிவிடும், மீனவர்களுக்கு கஷ்ரம், அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றெல்லாம் பேசப்படுகின்றது. அப்படிப் பேசுவது யார்? எதற்காக? என்று ஆராய்ந்தால்,

சேது சமுத்திரத்திட்டத்தைத் தொடங்குவது சிங்களவர்களுக்குப் பிடிக்கவில்லை. சிங்களவர்கள் சிலர் இதனைத் தூண்டி விட்டு இந்தத் திட்டத்தால் பாதிப்பு ஏற்படும் எனும் பிரச்சாரத்தைச் செய்து வருகின்றனர்.

சிங்கள அரசோ அல்லது தனிப்பட்ட சிங்களவர்களோ அல்லது சிங்கள வணிகர்களோ எனக்குத் தெரியாது, அவர்களது வஞ்சகம் எடுபடாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பை தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# வவு.இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தியாகி திலீபன் மருத்துவப் பிரிவினர் சேவை

(செட்டிகுளம்)

வவுனியாவின் இராணுவக் கட்டுபாட்டுப் பகுதியில் முதல் முறையாக விடுதலைப் புலிகளின் தியாகி திலீபன் மருத்துவப் பிரிவுப் போராளிகளின் நடமாடும் மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை செய்திருந்தார். இரண்டாம் லெப்ரினன்ட் மாலதியின் நினைவாக இந்த மருத்துவ சேவை இடம் பெற்றுள்ளது. 15 வைத்தியர்கள் அடங்கலாக முப்பது பேர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர். இந்தக் குழுவுக்கு மருத்துவர் எழுமதி கரிகாலன் தலைமை வகித்தார். நேற்று வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் 9ஆம் யுனிட் பகுதியில் முதற் கட்டமாக காலை 9 மணி முதல் மதியம் வரை இந்த மருத்துவ சேவை இடம் பெற்றது இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.என்.ஜீ. நாதன், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வன்னி மாவட்டத் தலைவர் செந்தில் நாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதன் போது நலன் புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு சிகிச்சைகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டதுடன்



பரிசோதனைகளும் இடம் பெற்றன. இந்தச் சேவையில் பல நூற்றுக் கணக்கான மக்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டனர். இதனை தொடர்ந்து பிற்பகல் மகாறம்பைக்குளம் பகுதியில் இரண்டாம் கட்டம் இடம் பெற்றது. வவுனியாவின் இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மருத்துவப் போராளிகள் மருத்துவ முகாம் ஒன்றினை நடத்துவது இதுவே முதல் முறையாகும்

இதேவேளை இவ்வாண்டு விடுதலைப்புலிகளின் முதல் பெண் மாவீரர் மாலதியின் நினைவு நாள் நிகழ்வுகள் வெகுசிறப்பாக நடத்துவதற்கு வவுனியா மாவட்ட அரசியல துறையினர் தயாராகி வருவதாகவும் முதலாம் திகதி முதல் பிரதேச ரீதியாக இந்த நிகழ்வுகள் இடம் பெற்று வருவதாகவும், தொடர்ந்து பத்தாம் திகதி வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இறுதிநாள் நிகழ்வுகள் இடம் பெறவிருப்பதாகவும் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை மேலும் தெரிவித்தார். (21)

# ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை மொழிபெயர்ப்பால் தாமதம்

(பெங்களூர்)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கை கர்நாடக மாநிலத்துக்கு மாற்றி மேல் நீதி மன்றம் உத்தரவிட்டது. வழக்கை விசாரிக்க பெங்களூரில் சிரிட்டி சிவில் நீதிமன்ற வளாகத்தில் தனி நீதி மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை நீதிமன்றில் இருந்த வழக்குச் சம்பந்தமான ஆவணங்கள், உபகரணங்கள், பெங்களூர் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்த வழக்குத் தொடர்பான ஆவணங்களை மொழிபெயர்ப்பது சம்பந்தமான பணிகள் நடைபெற்று வருகின்றன. 90சதவீத ஆவணங்கள் அனைத்தும் தமிழிலேயே இருக்கின்றன. அவற்றை மொழி பெயர்க்கப் பல மாதங்கள் ஆகும். மொழி பெயர்ப்பாளர்களை அரசு இன்னும் நியமிக்கவில்லை.

இதனால் வழக்கு விசாரணையைத் தொடங்குவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆவணங்களை மொழிபெயர்க்க தமிழ்-ஆங்கிலம் தெரிந்த 20பேராசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கர்நாடக தனிநீதிமன்று வேண்டுகோள்விடுத்துள்ளது.

மொழி பெயர்ப்பாளர்களை அரசு தேர்வு செய்துவருகிறது. இந்தப்பணி முடிந்ததும் 20 மொழி பெயர்ப்பாளர்களைக் கர்நாடக அரசு நியமிக்கும்.


## அறிவித்தல்

### கட்டாக்காலி கால்நடைகளைக் கையகப்படுத்துதல்

கிளிநொச்சி நகரத்திலும், சந்தை வளவிற்குள்ளும் கட்டாக்காலி யாக உலாவும் கால்நடைகளினால் வீதி விபத்துக்களும், பொருள் இழப்புக்களும் ஏற்படுகின்றன. எனவே இத்தகைய கால்நடைகளைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் 2004.10.01ஆம் திகதியில் இருந்து அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றது என்பதனைப் பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொன்.நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

(சி-10446)



## கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

கணக்கியல் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

01. கல்வித்தகைமை:- க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. அகவை :- 16 தொடக்கம் 21 வரை.

**குறிப்பு**

01. வேண்டுகை முடிவு நாள் :- 05.10.2004
02. நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:- 09.10.2004 காலை 9.00மணி
03. இடம் :- கிளி/மத்தியகல்லூரி, ஏ-9 வீதி, கிளிநொச்சி.
04. நேர்முகத்தேர்வுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் அவற்றின் நிழற்படப் படிகளையும் கொண்டு வருக.
05. பயிற்சிக் காலத்தில் 4000 ரூபா உதவிக் கொடுப்பனவுடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.
06. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:- பொறுப்பாளர், மனிதவள மேம்பாட்டுப்பகுதி, நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
07. பயிற்சி நெறிக்காலம் :- ஓர் ஆண்டு.
08. பயிற்சியின் பின் நிதித்துறை நிறுவனங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.
09. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறையின் சம்பளத்திட்டத்திற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

ஆளுகை,
மனிதவளமேம்பாட்டுப்பகுதி.

(சி-10234)



## 2005 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி, தினக்குறிப்பு அச்சிட்டு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

**நாட்காட்டி (கலண்டர்)**

எண்ணிக்கை 5500

**மேல்மட்டை :-** பொக்ஸ்போட்

அளவு :- 44cmX30cm

அத்தோடு எம்மால் தரப்படும் படம், சங்கங்களின் பெயர் என்பன பொறிக்கப்படல் வேண்டும்.(லெமனேற்றிங்)

**கலண்டர் கீழ்ப்பகுதி**

தாள்:- 70 கிராம் பாங்க்பேப்பர்
அளவு:- 44cm X 30cm
வர்ணம் :- இரண்டு

தாள்களின் தொகை :- 12 (ஒரு மாதம்)

அத்தோடு வாக்கிய பஞ்சாங்கமும் எம்மால் தரப்படும் கிறிஸ்தவப் பெருநாட்கள் மற்றும் விளம்பரங்கள் என்பனவும் இடம் பெறுதல் வேண்டும்.

12 தாள்கள் கொண்ட நாட்காட்டியின் மேற்புறத்தில் பொக்ஸ்போட்டில் அச்சிடப்பட்ட அட்டை ஒன்றும் இணைக்கப்பட்டு மட்டையின் மேற்புறத்தில் பித்தளைத் தகட்டினாலான கிளிப் போடப்பட வேண்டும்.

**நாட்குறிப்பு (டயறி)**

சாதாரண டயறி 600 அளவு $^1/_8$
மனேஜ்மென்ற் டயறி 30 அளவு $^1/_5$
தாள்:- பாங்க்பேப்பர் 80 கிராம்
கவர்:- பிளாஸ்ரிக் கவர்

மேற்குறிப்பிட்ட விபரத்திற்கு அமைய 20 பக்கங்களில் சங்கங்களின் பொதுவான விபரங்கள் அச்சிடப்பட்டு டயறிகளின் மேல் பக்கத்தில் இணைத்து பைண்டிங் செய்தல் வேண்டும். அத்தோடு டயறிகளின் மேல் பிளாஸ்ரிக் அட்டையில் எம்மால் தரப்படும் சங்கங்களின் பெயர்கள் பொறிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு :- மேற்படி இரு விடயங்களும் அச்சிட்டு வழங்குவதற்கான இறுதித் திகதி 15.11.2004 ஆகும்.

மேற்படி அச்சிடல் சம்பந்தமான தேவையான விபரங்களையும், விளக்கங்களையும் மாதிரிகளையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா 2500/= செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 08.10.2004 ஆம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இவ் விண்ணப்பங்கள் அன்றைய தினமே விண்ணப்பதாரர் முன்னிலையில் திறக்கப்பட்டு ஆராயப்படும்.

மேற்படி விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ, நேரிலோ பொது முகாமையாளர், வடமாகாண பனை, தென்னை வள அபி.கூ.ச.சமாசம், இல52, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(சி-10480)

பொது முகாமையாளர்

## சிம்பாப்வேக்கான கிரிக்கெட் சுற்றுலாவை

## இங்கிலாந்து அணி நிறுத்த வேண்டும்

### இயன்பொத்தம்



இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் இயன்பொத்தம் இங்கிலாந்து அணி சிம்பாப்வேக்கு மேற்கொள்ளும் சுற்றுப் பயணத்தை நிறுத்த வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

முகாபேயின் அரசாங்கம் இனவாதத்தைக் கடைப்பிடிப்பதாகவும், அங்கு பசி பட்டினி வாழ்வையே மக்கள் எதிர் கொள்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மைக்கல் வோனின் வீரர்கள் பற்றி கவலைப்படவேண்டியிருப்பதாகவும், அங்குள்ள அரசியல்வாதிகளும் கிரிக்கெட் அதிகாரிகளும் நடந்து கொள்ளும் விதத்தால் அவர்கள் தலைகுனிவுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கின்றார். அவர்களது டெஸ்ட் அந்தஸ்து பறிக்கப்பட்டது ஏன் என்று தனக்கு விளங்கவில்லை எனக்கூறும் பொத்தம் அவ்வாறான தடையை அரசு தவிர்க்க வேண்டும் என்று தெரிவிக்கிறார். முன்னர் இச்சுற்றுலாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும் வெளிநாட்டமைச்சர் தற்போது தடையேதும் விதிக்காதுள்ளார்.

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்; டெண்டுல்கர் விளையாடுவது சந்தேகமே



அவுஸ்திரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண் டுல்கர் விளையாடுவது இன்னும் சந்தேக மாகவே இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. அவர் காயம் காரணமாக நீண்ட நாட்கள் சிகிச்சை பெற்று ஓய்வில் இருக்கிறார்.

எனினும் அவர் பயிற்சி பெற்று வருகிறார். அவர் முதலாவது போட்டியில் விளையாடுவாரானால் ரசிகர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியாக இருக்கும்.

இதற்கிடையில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங்கும் இத்தொடரின் 3 ஆவது போட்டி வரை விளையாடமாட்டார். கடந்த 1969- 1970 ஆண்டுகளுக்குப் பின்னர் அவுஸ்திரேலியா இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் வெற்றி கொள்ளவில்லை.

டெண்டுல்கர் 114 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 9,740 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

## முக்கோண கிரிக்கெட் தொடர்; பாகிஸ்தானுக்கு அபார வெற்றி



அப்துல்ரசாக்

முத்தரப்பு கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயை 144 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது ரசாக் சதம் மற்றும் அப்ரிடியின் அதிவேக அரைச்சதம் அணிக்கு பிரமாண்ட வெற்றியைத் தேடித் தந்தது.

முத்தரப்புத் தொடரில் பாகிஸ்தான் இலங்கை, சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன. இத்தொடர் நேற்று முன்தினம் முல்தானில் துவங்கியது. முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி சிம்பாப்வேயை சந்தித்தது. நாணயச் சூழற்சியில் வென்ற பாகிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. பன்யங்கரா பந்து வீச்சில் யாசிர் ஹமித் (0), பாசித்கான் (12) ஆட்டமிழந்தனர். ஹொண்டோ வேகத்தில் சோயப்மாலிக் (1), யுகானா (1) வெளியேறினர். இதையடுத்து 4 விக்கெட் இழப் பிற்கு 36 ஓட்டங்கள் எடுத்து தவித்த அணியை அணித்தலை வர் இன்சமாம் ரட்சித்தார். இவர் 74 ஓட்டங்கள் எடுத்தார். இதற்குப் பின் அப்துல் ரசாக் அப்ரிடி இணைந்து அற்புத ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 114 பந்துகளில் 107 ஓட்டங்கள் எடுத்த ரசாக் ஒரு நாள் அரங்கில் தனது இரண்டாவது சதத்தைப் பெற்றார்.

5பவுண்டரி, 5சிக்சர்களை விளாசிய இவர் கடைசி வரை ஆட்டமிழக்காது இருந்தார். அதிரடி ஆட்டத்தைக் கையாண்ட அப்ரிடி அதிவேகமாக அரைச் சதத்தை எட்டினார். 26 பந்துகளில் 58 ஓட்டங்களைக் குவித்த இவர் ஹொணடோ பந்துவீச்சில் போல்டானா் இவரது ஸ்கோரில் 5 பவுண்டரி, 4 சிக்சர்கள் அடங்கும். இறுதியில பாகிஸ்தான் அணி 50 ஓவரில 5 விக்கெட் இழப்பிற்கு 292 ஓட்டங்கள் குவித்தது. சிம்பாப்வே தரப்பில் ஹொண்டோ 3, பன்யங்கரா 2 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

அடுத்துக் களமிறங்கிய சிம்பாப்வே அணியின் விக்கெட்டுகள் வழக்கம் போல் மளமளவெனச் சரிந்தன. ஓரளவுக்குத் தாக்குப்பிடித்து விளையாடிய சிபாண்டா அதிக பட்சமாக 57 ஓட்டங்களை எடுத்தார். இவர் சோயப்மாலிக் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இப்ராகிம் 29 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில வெளியேற, சிம்பாப்வே அணி 38.3 ஓவரில் 148 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. பாகிஸ்தான் தரப்பில் சுழல் பந்துவீச்சில் அசத்திய அப்ரிடி, சோயப்மாலிக் தலா 3விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## இரண்டாவது டெஸ்ட்போட்டியிலும் பொண்டிங் விளையாடமாட்டார்



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் விளையாடமாட்டார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

லண்டனில் நடந்த போட்டியில் கைவிரலில் காயமடைந்த பொண்டிங் நாடு திரும்பி சிகிச்சை பெற்றார்.

முதல் கட்ட சிகிச்சை முடிந்த பின்னர் பொண்டிங்கிற்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் பொண்டிங் இரண்டாவது கட்ட சிகிச்சையை நேற்று மேற்கொண்டார். அவரது காயம் இன்னும் குணமடையாததன் காரணமாக இன்னும் சில வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டும் என மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

இதனால் அவர் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## கென்ய கிரிக்கெட் அணிக்குப் புதிய தலைவர்; திக்கோலோ உட்பட 8பேர் அணியிலிருந்து நீக்கம்




கென்ய அணித்தலைவர் ஸ்ரீவ் திக்கோலோ தலைமையிலான எட்டு வீரர்கள் கென்ய அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலாக 9 வீரர்கள் 15 பேர் கொண்ட அணியில் இணைக்கப்பட்டுள்ளதுடன், புதிய தலைவராக கித்தெஸ் மொடி நியமிக்கப் பட்டுள்ளார்.

முன்னாள் அணித் தலைவர் திக்கோலோ உட்பட எட்டு வீரர்களும் ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதையடுத்து அந்நாட்டு கிரிக்கெட் சபையால் நீக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து திக்கோலோ தெரிவிக்கையில்;

தாங்கள் பேச சபை சந்தர்ப்பம் வழங்கவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளதுடன் தாம் பயிற்சிக்கு சமுகம் தருவதைச் சபை புறக்கணித்திருப்பதாகவும், ஆகவே தெரிவை தாம் கருத்தில் எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக திக்கோலோ துடுப்பாட்டவீரர் அன்டிபோல், கென்யப் பயிற்றுனர் ஆகியோர் மீது மிகவும் கோபமாகவுள்ளார்.

## பெண்களுக்கான சர்வதேச டென்னிஸ்: காலிறுதிக்கு முன்னேறினார் ஷரபோவா



கொரியாவில் நடந்துவரும் பெண்களுக்கான சர்வதேச டென்னிஸ் போட்டியில் பந்தயத்தின் காலிறுதிக்கு மரியஷரபோவா முன்னேறியுள்ளார்.

பெண்களுக்கான சர்வதேச டென்னிஸ் பந்தயம் கொரியாவில் நடந்துவருகிறது. இந்தப் போட்டியின் நேற்று முன்தின ஆட்டத்தில் முன்னணி வீராங்கனை மரிய ஷரபோவா-மிகோசாக்கி (ஜப்பான்) ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர். நடப்பு விம்பிள்டன் சம்பியனான ஷரபோவா இந்தப் போட்டியில் எந்தவிதமான நெருக்கடியையும் சந்திக்கவில்லை. முடிவில் அவர் 6-3,6-1 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றார். இந்த வெற்றியை அடுத்து ஷரபோவா காலிறுதிக்கு முன்னேறினார். நடக்கவுள்ள காலிறுதியில் ஷரபோவா-ஸ்டவுசர் ஆகியோர் மோதவுள்ளனர். இந்த ஆண்டில் இருவரும் மோதிய போட்டியில் ஷரபோவா தோல்வி கண்டார். இதற்குப் பதிலடி கொடுக்க ஷரபோவாவுக்கு தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது.




-சந்திரோதயா வி.கழகம் நடாத்தும்-

## மாவீரர் வெற்றிக் கிண்ண கால்பந்து; சிறப்புற நடைபெற்ற முதல் நாள் நிகழ்வு



சந்திரோதயா விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாவீரர்வெற்றிக் கிண்ணங்களைப் படத்தில் காணலாம்.

உருத்திரபுரம் கிழக்கு சந்திரோதயா வி.கழகம் நடாத்தும் மாவீரர் வெற்றிக் கிண்ண காலப்ந்து போட்டி நேற்று ஆரம்பமானது.

முதல் நாளான நேற்று காலை முதல் மாலை வரை 8 போட்டிகள் நடைபெற்றன.

இதில் வட்டக்கச்சி தங்கத் தாரகை அணியை திருநகர் நீலம அணி 6-1 என்ற கோல்கணக்கிலும், ஜெயந்திநகர் பிறைச்சன் அணியை உருத்திரபுரம் A அணி 2-0 என்ற கோல்கணக்கிலும், உருத்திரபுரம் தினேஷ் அணியை வட்டக்கச்சி இளந்தளிர் A அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையிலும் வட்டக்கச்சி ஜொனிஅணியை, லக்கி ஸ்ரார் மஞ்சள் அணி 3-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், வேம்படி ஓடுமீன் அணியை ஸ்கந்தா அணி 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும்,உழவர் ஒன்றிய B அணியை புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையிலும் தோற்கடித்தும், ஸ்கந்தா A அணி, உழவர் ஒன்றியம் A அணி என்பன போட்டியின்றியும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின. போட்டியின் 02ஆம் நாளான இன்று 9-18 வரையான கால் பந்துப் போட்டிகளும்,மற்றும் கைப்பந்துப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. மேற்படி போட்டிகளுக்கு பிரதம நடுவர்களாக க.பிரபாகரன், ந.சுவேந்திரராஜா ஆகியோர் கடமையாற்றினர்.

## சிந்தனைக்கு



வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அதிகரிக்கும் அபாயம்!

விலைவாசிகள் கட்டுக்கடங்காது எகிறிச் செல்கின்றது. மீண்டும் ஒரு தடவை விலைவாசிகள் ஏறுவதற்கான சமிக்ஞைகள் வெளிப்பட்டுள்ளன. சர்வதேச சந்தையில் மீண்டும் பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையே மீண்டுமொரு விலைவாசி உயர்வை எதிர்பார்ப்பதற்குக் காரணமாகும்.

இவ்விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தினால் எதுவுமே செய்யமுடியாதுள்ளது. அனைத்துத் தரப்பு மக்களிடம் இருந்து விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கைகளும், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறினால் பெரும் போராட்டம் வெடிக்கும் என்ற எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சிக் காலத்தில் விலைவாசி ஏற்றத்தினைப் பெரிதாக்கிப் போராட்டங்களை நடாத்திய ஜே.வி.பி. தற்பொழுது ஆளும் கட்சியாக – அமைச்சுப் பொறுப்புக்களுடன் மௌனமாகவுள்ளது. விலைவாசி ஏற்றம் கட்டுப்படுத்தப்படும், சம்பள உயர்வுகள் வழங்கப்படுமென வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி.யினர் தற்பொழுது அவற்றிற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்பது போன்ற நிலைப்பாட்டுடன் ஒரு பார்வையாளர் போன்றுள்ளனர்.

இவ்வாறாக, விலைவாசி ஏற்றம் கட்டுக்கடங்காது அதிகரித்துச் செல்லும் நிலையிலும் சமாதானத்திற்கு எதிரான – அதாவது, இடைக்கால நிர்வாக சபை யோசனைக்கு எதிராகப் போராட்டங்கள் தீவிரமாகியுள்ளன. பாதயாத்திரைகள், கையெழுத்து வேட்டைகள் என பௌத்த சிங்கள அடிப்படைவாத சக்திகளின் பெயரில் சமாதானத்திற்கு விரோதமான சக்திகள் போராட்டங்களைத் தொடங்கியுள்ளன.

ஆனால், விலைவாசி ஏற்றம், நாட்டின் பொருளாதார நெருக்கடி போன்றவற்றில் மௌனம் காக்கும் ஜே.வி.பி.யினர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்குத் தமது பலத்த கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர். அரசாங்கம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேசினால் அரசாங்கத்திற்கு எதிராகப் போர்க் கொடி தூக்கப் போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

இன்றைய நிலையில், இவ்விரண்டு விடயங்களும் அதாவது, சமாதானப் பேச்சுவார்த்தைகளும், பொருளாதார நெருக்கடியும் அரசாங்கம் எதிர்நோக்கும் முக்கிய விவகாரங்களாகும். ஆனால், இவ்விரண்டு விடயங்களும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. ஒன்றின் தீர்வு மற்றொன்றின் தீர்வாக அமையக் கூடியதும் ஆகும். குறிப்பாக, இனப்பிரச்சினையின் தீர்வு பொருளாதார நெருக்கடியைத் தளர்வடையச் செய்யக் கூடியதாகும்.

ஆனால், அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடானது, இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கானதொன்றாகத் தென்படவில்லை. ஒன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடித்தல் அன்றி யுத்தம் ஒன்றை நோக்கிச் செல்லுதல் என்ற ரீதியிலேயே அதன் செயற்பாடுகள் உள்ளன. சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் பேசினாலும் அதனை முன்னெடுக்கும் வகையில் செயற்பாடுகளை அவர் மேற்கொள்வதாக இல்லை.

ஆகையினால், சிறிலங்காவில் தற்பொழுது அதிகரித்த போக்கிலுள்ள சமாதானத்திற்கு எதிரான பாதையையே அவர் தெரிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் நிரம்ப உண்டு. ஏனெனில், அத்தகைய தெரிவு அவருக்குத் தென்னிலங்கை அரசியலைக் கையாள்வதற்கு இலகுவானதாக்கிவிடும். அதாவது, ஆட்சியில் சனாதிபதி சந்திரிகா நிலைப்பதற்கான வாய்ப்பு உறுதியானதாகிவிடும். குறிப்பாக, அடிப்படைப் பௌத்த – சிங்களப் பேரினவாத சக்திகள் ஜே.வி.பி. போன்ற அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வரக்கூடும்.

அது மட்டுமன்றி நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படும் கொந்தளிப்பைத் தமிழருக்கு எதிரான யுத்தத்தில் திசைதிருப்பி விடுதல் கூடும். இதன் மூலம் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு யுத்தமே காரணம் எனச் சாதிக்க முடியும். இதன் மூலம் தமிழர் மீதான முரண்பாட்டையும், பகையையும் மேலும் தீவிரப்படுத்த முடியும். இதன் மூலம் ஆட்சிக்கு ஏற்படும் பெரும் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள வாய்ப்பு உருவாகலாம்.

ஆகையினால், பொருளாதார நெருக்கடி தீவிரம் அடைய அடைய சிறிலங்கா ஆட்சியாளர்கள் யுத்தம் நோக்கிச் செல்வற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன. ஏனெனில், சமாதானம் குறித்த இணக்கப்பாடு ஆட்சியாளர்களுக்குள் எட்டப்படுவதைவிட, யுத்தத்திற்கான இணக்கப்பாடும், யுத்தத்திற்கான தயார்ப்படுத்தலும் ஆட்சியாளர்களுக்கு இலகுவானதாகும். இதனால், பொருளாதார நெருக்கடி தீவிரமாக ஆக யுத்த அபாயம் அதிகரித்துச் செல்வதாகவே இருக்கும்.

# உலக சிறுவர்கள் அனுபவிக்கும் சுதந்திரம் போல் எமக்கும் வேண்டும்

## -யுனிசெப் பிரதிநிதிக்கு சிறுவர்கள் மகஜர்

"உலக சிறுவர் தினமாகிய இன்றைய நாளில் தமிழச் சிறுவர்களாகிய நாம் அரசிடமும், சிறுவர் நிதியத்திடமும் கேட்டு நிற்பது.....

உலக சிறுவர் அனுபவிக்கும் சுதந்திரம் போல எமக்கும் வேண்டும்" இவ்வாறு நேற்று சிறுவர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய வதிவிடப் பிரதிநிதிக்கென வழங்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும், எங்களைப் பாகுபாடு காட்டி ஒதுக்காமல், எங்கள் உயிர் வாழ்தலையும், மேம்பாட்டையும் மதித்து எங்கள் கல்வியில் அக்கறை கொண்டு கௌரவமான பாதுகாப்பான வாழ்விற்கு வழி செய்யுங்கள்.

மாறாக நாகர் கோவில் மகா வித்தியாலயத்தில் குண்டு வீசி எம போன்ற பாடசாலைச் சிறுவர்களைக் கொடூரமாகப் படுகொலை செய்ததையும், இன்னும் எங்கள் பாடசாலைகளை முட்கம்பிகளுக்குள முடக்கி காவலரணாக்கி ஆக்கிரமித்து வைத்திருப்பதையும், எங்கள் வீட்டுப்படலையில் ஆமிக்காரன் நிற்பதையும், எங்கள் அப்பா எங்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதைத் தடுப்பதையும், நாங்கள் சுரண்டப்படுவதையும், இராணுவத்தால் தொடர்ந்தும் சித்திரவதைக குள்ளாவதையும் சிறுவர்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் உருவாக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியம் எம்மையும் பாதுகாக்க வேண்டும்.

எமது சமூகத்தில் ஊடுருவும் உரிமை மீறலையும், அவற்றின் வழிகளையும், காரணகர்த்தாக்களையும் எமக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிக்காட்டுவது சிறுவர் பாதுகாப்பு மையத்தின் பொறுப்பாகும்.

எம்மீது போரைத்திணித்து எமது உயிர்கள் பறிக்கப்படாத வகையில் அனைவரும் வாழ்வது போல் நாமும் வாழவழி விடுங்கள் நாம் சுதந்திரமாக மூச்சு விட ஒத்துழையுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36,27,33)

# ஊர்காவல் படையினரை விடுவிக்க நடவடிக்கை எடுக்காவிடின் ஆர்ப்பாட்டம்

## வடக்கு கிழக்கு சிங்களவர் அமைப்பு

விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல் படையினரை இம் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னதாக விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், நாட்டில் அரசுக்கெதிராகப் பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என வட-கிழக்கு சிங்களவர் அமைப்பு அரசுக்கு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக திருகோணமலையில் உண்ணாவிரதம் நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே.

# இந்தியாவிலிருந்து 20 ஆயிரம் தொன் அரிசி அடுத்த வாரம் இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து 20,00ப் தொன் அரிசி அடுத்த வாரம் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட வர்த்தக நுகர்வோர் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேற்கொண்ட நடவடிக்கையினை அடுத்து இந்தியாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி ஒரு கிலோ 35 ரூபா வீதமும், ஏனைய அரிசி வகைகள் ஒரு கிலோ 25 ரூபா முதல் 28 ரூபா வரையும் விற்பனை செய்யப்படவிருப்பதாக வர்த்தக நுகர்வோர் அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை பாகிஸ்தானில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் தாமதமடைந்து வருவதாக அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.(32)

# ரஷ்யாவில் வைத்தியப் படிப்பை முடித்தோரை பதிவு செய்வதற்கு வைத்தியர் சங்கம் எதிர்ப்பு

ஆறு மாதங்கள் ரஷ்ய நாட்டில் வைத்தியப் படிப்பை முடித்துக் கொண்டு இலங்கைக்கு திரும்பியுள்ளவர்களை அரசாங்கம் பதிவு செய்தால் வைத்தியர் சங்கத்தில் இருந்து அனைவரும் விலகிக் கொள்வோம் என இலங்கை வைத்தியர் சங்கம் அறிவித்துள்ளது. அப்படி விலகியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் சுகாதார அமைச்சு மேற்கொண்டால் கடும் தொழிற் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என வைத்திய அதிகாரிகள் சங்க செயலாளர் அனுருத்த பாதெனிய அறிவித்துள்ளார். வைத்தியர்களாகக் கடமையாற்ற வேண்டுமானால் ஆறு வருடங்கள் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்டு சித்தியடைய வேண்டும் என வைத்தியர் சங்கச் செயலாளர் மீண்டும் அறிவித்துள்ளார்.

# அரசாங்கப் பேருந்துகளிலும் கட்டணங்கள் அதிகரிப்பு

அரசாங்கப் பேருந்துகளின் போக்குவரத்துக் கட்டணங்கள் திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப் பட்டவுள்ளன. நேற்று முதல் தனியார் சிற்றூர்திக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தனியார் பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனத்தனியார் சிற்றூர்தி உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். தமது கோரிக்கையினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில் சேவைப் புறக்க ணிப்புப் போராட்டம் ஒன்றை அடுத்த புதன் கிழமை நடத்தப் போவதாக இவர்கள் எச்சரித்தி ருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆகக்குறைந்த போக்குவரத்துக் கட்டணம் தற்போது 3ரூபா 50சதத் தில் இருந்து 4 ரூபாவாக அதிகரிக் கப்பட்டுள்ளது. 5ரூபா கட்டணம் தொடர்ந்தும் அதே அளவாக இருக்கும். அதே நேரம் 6ரூபா முதல் 27 ரூபா 50 சதம் வரையான கட்டணங்கள் அனைத்தும் 1 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன. 27 ரூபா 50 சதம் முதல் 40 ரூபா வரையான கட்டணங்கள் 2 ரூபாவாலும், 40 ரூபா முதல் 65 ரூபா வரையான கட்டணங்கள் 3 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (32)

# முறையீடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் அத்துமீறல்கள் தொடர்பாக சர்வதேசப் பாராளுமன்றக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார். ரவி கருணா நாயக்க மற்றும அப்துல் காதர் ஆகியோர் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (32)

# ஒரே நாளில் கடவுச்சீட்டு நடைமுறை டிச.வரை நீடிப்பு

ஒரு நாளில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும நடைமுறை டிசம்பர் மாதம் வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரே நாளில கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் நடைமுறை நேற்றுமுதல் நிறுத்தபடுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறுகிய கால அறிவித்தலின் அடிப்படையில் இந்த நடைமுறை நிறுத்தப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும என்று பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ள நிலையில் இந்தத் திட்டத்தை அமுற்படுத்துவது அடுத்த வருட ஆரம்பம் வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களக் கட்டுப்பாட்டாளர் ஜினதாஸா தெரிவித்துள்ளார். (32)

# சுவிஸில் இடம்பெற்ற சந்திப்பில்....



## குடமுறுட்டிப் பாலத் திருத்த வேலைக்காக பூநகரி-பரந்தன் வீதி மூடல்

குடமுறுட்டிப் பாலத் திருத்த வேலைகளுக்காக பரந்தன் பூநகரி வீதி இன்று காலை 8.30 மணிக்கு போக்குவரத்துத் தடை செய்யப் பட்டுள்ளது.

மேற்படி வீதியில் அமைந் துள்ள குடமுறுட்டிப்பாலம் மழை காலத்தில் பிரயாணத்திற்கு ஏற்ற விதத்தில் காணப்படாததால் இப் பாலத்தை வீதி அபிவிருத்தி அதி கார சபை மிகத் துரிதமாக மாரி காலத்திற்கு ஏற்றவகையில் திருத்தியமைக்கத் தீர்மானித் துள்ளதால் இப் பாலம் ஊடான பாதையை மக்கள் போக்குவரத்தை இன்று காலை 8.00 மணிமுதல் தடைசெய்து பாலவேலைகளை மிகத் துரிதமாக மேற்கொள்ள ஒத்து ழைப்பு வழங்குமாறு கோரப்பட்டுள் ளதுடன், இதனால் ஏற்படும் அசெளகரியங்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனது மனவருத்தத்தையும் தெரி வித்துக் கொள்கின்றது.

### உயர்...

றவுச் சங்கத்தின் கிளை நிலையமொன்றினைத் திறக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் படையினரால் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளன. கிளை நிறுவனத்திற் கான கட்டடமொன்றினைக் கட்டு வதற்கான அனுமதியைப் படைத் தரப்பு வழங்காமையினால் தொடர்ந தும் நீண்டதூரம் பயணித்தே இம் மக்கள் உலர்உணவு நிவாரணத் தைப் பெற்று வருவதாகவும் கூறப் படுகின்றது. இதனிடையே கூரை இல்லாத வீடுகளாகவும், சுவர் இல்லாத வீடுகளாகவும், மலசல கூடமில்லாத வீடுகளாகவும் மீளக்குடியமர்த்த குடும்பங்களது வீடுகள் காணப்படுகின்றன.(27,33)

### ஜெனீவாவில்...

தாயக விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் சாவடைந்த மக்க ளுக்குமாக அகவணக்கம் செலுத் தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நீண்ட விளக்கவுரையை நிகழ்த்தி னார். தொடர்ந்து இடைகாலத் தன் னாட்சி வரைவு பற்றியும் அதன் சாதக பாதக நிலைமைகள் பற்றியும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி யும் ஆராயப்பட்டது. இக் கலந்துரையாடலில் அன்ரன் பாலசிங்கம், சு.ப தமிழ்ச் செல்வன், க.வே பாலகுமாரன் பா.நடேசன், பரா, இ. கௌசல்யன், செ.புலித் தேவன் தமிழ்விழி, செல்வி, திருமதி அடேல்பாலசிங்கம், வி.உருத்திரகுமாரன், அன்ரன் பொன்ராசா, சாந்தன்,பா.பாஸ்கரன் நேருகுணரட்னம், இரேனியஸ் செல்வின், ஜெ.மகேஸ்வரன் சட்ட நிபுணர்களான சிவாபசுபதி, போல் டொமினிக் விஸ்வேந்திரன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

சுவிற்சர்லாந்தில் நடைபெறவுள்ள அரசியல் அமைப்புக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தாயகத்தில் இருந்து சென்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிக ளுடன், விடுதலைப்புலிகளின் அரசி யல் ஆலோசகரும், தத்துவாசிரி யருமான அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகி யோர் நேற்று முன்தினம் இரவு இணைந்து கொண்டனர்.

இதற்கு முன்னதாக லண்டனில் இருந்து சென்ற அன்ரன் பால சிங்கம் அவர்களை ஜெனீவா விமான நிலையத்தில் வைத்து அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர் வாகத்துறைப் பொறுப்பாளர் பரா,சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப் புக் குழுப் பொறுப்பாளர் குலம் உட பட தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் வர வேற்றனர்.

இதன் பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல் வன், அரசியல் ஆலோசகர் அன்ரன பாலசிங்கம் ஆகியோர் கலந்துரை யாடலை நடத்தினர். தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் கருத் துக்கள், தகவல்களை சு.ப தமிழ்ச் செல்வன் அன்ரன் பாலசிங்கம் அவர்களிடம் தெரிவித்தார். விடு தலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே பாலகுமாரனும் நேற்று முன் தினம் இரவு ஜெனீவா சென்று தாயகத்திலிருந்து சென்ற பிரதி நிதிகளுடன் இணைந்துகொண்டார்.

### வீரவணக்கக் ...

* கடற்புலி 2ஆம் லெப். மகேந்திரம் (பாலசுப்பிரமணியம் சந்திரகுமார், வல்வெட்டித்துறை)

கடந்த 30.09.1996 அன்று வட மராட்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின் போது வீரச்சாவடைந்த.

* மேஜர் இழஞ்செழியன்/ சுபாஸ் (இந்திரன் இராஜ்மோகன், இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி)

* கப்டன் உதயராசா (அம்பிகைபாலன் ஜெயசீலன், புலோலி மேற்கு)

கடந்த 27.11.1996 அன்று பருத்தித்துறைப் பகுதியில் சிறி லங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த.

* கடற்புலி கப்டன் வரு ணன்/கபில் (செல்வநாயகம் அருட் செல்வன் பருத்தித்துறை)

* லெப்.நீலவண்ணன்/சரவ ணன் (சிறிபாலசுப்பிரமணியம் தமி ழழகன் நெல்லண்டை தும்பளை, பருத்தித்துறை)

ஆகிய மாவீரர்களின் நினை வுக் கற்களே திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

வடமராட்சி மாவீரர் பணி மனைப் பொறுப்பாளர் வே.தமிழ ரசன் தலைமையில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ் வில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள் ஏற்றி வைக்க அதனையடுத்து ஈகச்சுடர் ஏற்றல், மலர்மாலை அணிவித்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாவீரர்களின் பெற்றோர் கள்,உறவினர்கள் யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப் பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அருணா, கடற் புலிகளின் மகளிர் அரசியல்துறை வடமராட்சிப்பொறுப்பாளர் கல் யாணி, வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் தயா யாழ்.மாவட்ட தமிழ்க் கூட்ட மைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து தவயோகம் (தேசிய எழுச்சிப்பேரவை) தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், கடற்புலிகள் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் ஆகியோர் வீரவணக்க உரைகளை ஆற்றினர்.

தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்கள் பாண்ட் வாத்திய இசையுடன் எடுத்துச் செல்லப்பட்டு ,வடமராட்சி துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் நினை வுக் கற்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன. (27)

### மன்னாரில் புலிகளின்....

அலுவலகத்தில் வைத்து இரண்டு உந்துருளிகள், கணினி, தொலைக் காட்சிப்பெட்டி, டெக் மற்றும் அலு வலக உபகரணங்கள் அனைத்தும் எரிக்கப்பட்டதுடன், இவ் அலு வலகத்தைத் தீமூட்டி எரித்து முற்று முழுதாக அழித்து நாசப்படுத்தியுள் ளனர்.

மேலும் மன்னார் பிரதான வீதியில் உள்ள தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத்தின் முன் பகுதியில் உள்ள பெயர்ப்பல கையை உடைத்துச் சேதப்படுத் தியதுடன் அங்கிருந்த ஆவணங்க ளையும் கிழித்து வீதியில் எறிந் துள்ளனர்.

மற்றும் விடுதலைப் புலிக ளின் மக்கள் தொடர்பகம், சமா தானச் செயலகம் ஒன்றிணைந்த செயலகத்தின் பெயர்ப்பலகை அலுவலக முன்கதவு, யன்னல் போன்றவற்றையும் அடித்துச் சேதப் படுத்தியுள்ளனர்.

சம்பவம் நடைபெறுவதற்கு முன்பாக இரவு 9.00 மணியிலி ருந்து விடுதலைப்புலிகளின் அலு வலகத்திற்கு முன்னால் பிரதான வீதியில் 10இற்கு மேற்பட்ட பொலி சார் தரித்து நின்றுள்ளதுடன், சம்ப வம் முடியும் வரை நின்றுள்ளனர். மேற்படி தாக்குதலை மேற் கொண்ட முஸ்லிம் தேசவிரோதக் குழுவுக்கு அனுசரணையாக பெயர்ப்பலகையை உடைப்பதற் குப் பொலிசாரும், பொலிஸ் புலனாய்வுப்பிரிவினரும் இணைந்து செயற்பட்டுள்ளனர்

இச்சம்பவம் நடைபெற்று 15 நிமிடங்களில் இவ்விடத்தில் தரித்து நின்ற பொலிசார் அனைவரும் சென்று விட்டனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கரிசலில் வைத்து கரிசலைச் சேர்ந்த சலீம் என்பவர் இனம் தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப் பட்டமையைக் காரணம் காட்டி நடை பெற்றுள்ளது. இதேவேளை நேற்று மன்னாரில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக கப்பட்டது. இன்று காலை அது நீக்கப்படுமென அறிவிக்கட்டுள்ளது.

### மன்னார்...

மேற்பட்ட தேச விரோதக்குழுக் களைச் சேர்ந்தவர்களும் அவர் களுக்குத் துணையாக பொலி சாரும் இணைந்து செயற்பட்ட தனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்த விடயங்களை நாம் நிதானமாகவும், பொறுமை யாகவும் கையாண்டு எமது அரசி யல் பணிகளை இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதியில் செய்கின்ற நிலைமையினை உணரமுடிகிறது.

**நேற்று இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கும் உங்க ளுக்கும் தொடர்பு இல்லை என்கின்ற வகையில் எதற்காக உங்களது அலுவலகங் பலர் சேர்ந்துதாக்க வேண்டும்**

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். திட்டமிட்ட அடிப் படையில் மன்னார் மாவட்டத்தில் காலத்திற்குக் காலம் பல்வேறு செயற்பாடுகள் திட்டமிட்ட வகை யில் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. குறிப்பாக மதரீதியாக மக்க ளைத் தூண்டிக் கிளர்ச்சிகளை ஏற்படுத்தி வருகின்ற இவ்வாறான தேசவிரோதக் குழுக்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் செயற்பா டுகளை இவ்விடத்தில் விரும்பாத சில தீயசக்திகளும் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவதாக நாங்கள் கருதுகிறோம்.

### தமிழர்...

தோடு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கமைப்புடன், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கிளி. மாவட்ட இணைப்பாளர். இ.ராஜன் அவர்களின் தலைமையில் கலை நிகழ்வுகளும் சிறப்புற இடம் பெற்றன. இதேபோல் கிளிநொச்சி மாகாவித்தியாலயத்திலும் இத் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்ட இதேவேளை புதுக்குடியிருப்பில் பரந்தன் முல்லை வீதியில் ஆரம்ப மான பாண்ட் வாத்திய அணிவகுப் புடன் புதுக்குடியிருப்பு மாகவித்தி யாலயத்திற்குச் சிறுவர்கள் அழைத்துவரப்பட்டு அங்கு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.இதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்க ளும் அனுசரணை வழங்கியிருந்தன.

அத்தோடு யாழ்.மாவட்டத் தின் ,பல பகுதிகளிலும் இந்நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசர ணையில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் சிறப்பாகச் சிறார்களின் ஊர்வலம் இடம்பெற்றதோடு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

வவுனியாவில் சிறுவர் தின நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், முன்பள்ளி மேம்பாட்டுக் கல்வி நிறுவனமும், அரசசார்பற்ற நிறுவனமும் இம்முறை வவுனியா மாவட்டத்திற்கான சிறுவர் தின நிகழ்வுகளைச் சிறப்பாகச் செய் திருந்தன. வவுனியா தபாற் கந்தோர் சந்தியில் ஆரம்பமான சிறுவர் பேரணி வவுனியா நகரின் ஊடாகச் சென்று நகரசபை மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்தப் பேரணியில் மூன்று மொழிகளையும் சார்ந்த சிறார்கள் கலந்து கொண்டனர். இதேபோன்று பிரதேச ரீதியாகவும் வெவ்வேறு இடங்களிலும் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மல்லாவிப் பிரதேசத்தில் அப்பகுதி முன்பள்ளி ஆசிரியர் களால் சிறுவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டதுடன், யோக புரம் மகாவித்தியாலய மண்டபத் தில் மாலை 2.45 மணியளவில் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப் பாளரின் தலைமையில் கலை நிகழ்வுகள் சிறப்பாக நடை பெற்றன.

(21,33,27,ச,சோ,கு,08,24)


## வெளியீட்டு விழா அழைப்பிதழ்




காலம் : 02.10.2004 (சனிக்கிழமை)

இடம் : யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சங்கத்தானை.

நேரம் : காலை 10.00 மணிக்கு

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| பொதுச்சுடரேற்றல் | :திரு.சொலமன் சிறில் அவர்கள், :திரு.அருந்தவபாலன் அவர்கள். |
| தேசியக்கொடியேற்றல் | :திரு.கலைவாணன் அவர்கள், (தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்) |
| வரவேற்புரை | : திரு.அ.திருநாவுக்கரசர் |
| தலைமையுரை | : திரு.முருகு பாரிமகன் |
| சிறப்புரை | :திரு.நடராஜா இரவிராஜ் அவர்கள் (யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்) :திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்) |
| வெளியீட்டுரை | :திரு.சி.இளம்பரிதி (யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்) |
| சிறப்புப் பிரதிகள் வழுங்குபவர் | : திரு.சோ.தங்கன் (துணைப்பொறுப்பாளர்,அரசியல்துறை) |
| நூல் மதிப்பீட்டுரை | :திரு.சிவபாலன், திரு.ஆர்வலன் |
| பதிலுரை | : நூல் ஆசிரியர் |
| நன்றியுரை | : திரு.பாலகுமார் |

தாங்கள் வருகை தருவதால் நாங்கள் பெருமையடை கிறோம்.

நூல் ஆசிரியரும்,தமிழ்த்தாய்வெளியீட்டகமும்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.